*இக் கட்டுரை, பண்டைய செக்குத் தொழிலையும், அதன் ஊற்றும் விளைவுமான எண்ணெய் உற்பத்தியையும், எண்ணெய் வணிகம் செய்த மக்களின் பண்டைய வாழ்வியலையும் ஆராய்கிறது. செக்குத் தொழிற்பட்ட செக்கார் சாதியின் பல்வேறு படிநிலைகளையும், அந்த உட்பிரிவுகளின் பொருளாதார நிலைகளையும், பிறப்பால் சாதியாகக் கட்டமைக்கப்பட்ட சமூக நிலைகளையும், கல்வெட்டுகளின் வாயிலாகவும் இலக்கியங்களின் வாயிலாகவும் ஆராய்ந்து, அவர்களிடையே நிலவிய மூட நம்பிக்கைகளையும், சமூக ஏற்றத் தாழ்வுகளையும், அவற்றுக்குக் காரணமான சாதிப் படிநிலைகளையும் படம்பிடித்துக் காட்டுகிறது.*


### சாதியின் தோற்றுவாய்:

வரலாறு என்பது தற்செயலாக நிகழும் சம்பவங்களின் தொகுப்பன்று. சமுதாயத்தில் ஏற்படும் வளர்ச்சிகளும் மாற்றங்களும் சில திட்டவட்டமான நியதிகளுக்கேற்ப அமைவதாகும். அது, சமூக மாற்றங்களின் போக்கினை அறிய உதவும் ஒரு கருவி. மக்களின் வாழ்க்கை, 'மாற்றம் ஒன்றே மாறாதது' – என்ற சமூக இயக்கவியல் நியதிக்கேற்பக் காலத்திற்குக் காலம் வளர்ச்சியையும் மாற்றத்தையும் பெற்று வந்துள்ளதை வரலாற்றில் காணலாம். மக்களின் வாழ்க்கைத்தேவையின் அடிப்படையில், தொழிலும் தொழிலைச் சார்ந்த கருவிகளும் உருவாக்கப்பட்டன. [1] கால மாற்றத்தின் பொழுது சமுதாயத்தில் ஏற்பட்ட மாறுதல்கள், பல படிநிலைகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் முரண்பாடுகளையும் உருவாக்கின.

உயிர் வாழ்வதற்காக உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்களில், உபரி உற்பத்தியை எதிர்காலத் தேவைக்குச் சேமித்த

பொழுது, மிகுந்த சேமிப்பைக் கொண்டோர் உடைமையாளராகவும், சேமிப்பு இல்லாதோர் உடைமையற்றவராகவும் விளங்கினர். உற்பத்திக் கருவிகளை உடைமையாகப் பெற்றவர்கள் செல்வந்தர்களாகவும், உற்பத்திக் கருவிகளை உடைமையாகப் பெறாதவர்கள் வறியவர்களாகவும் காணப்பட்டனர். மக்கள் தேவையின் நிர்பந்தத்தால் உருவான தொழில்கள், பிறகு பொருளீட்டும் அமைப்பாக உருமாறியது. இத்தகைய வளர்ச்சியும் முரண்பாடும் அனைத்து தொழிற்குடிகளிலும் காணப்பட்டன. இத்தகைய போக்கு பிற்காலத்தில் மதம்சார்ந்த வருணாசிரமச் சனாதனக் கோட்பாடுகளால், பிறப்பின் அடிப்படையில் தொழிற் சார்ந்த சாதியக் கட்டமைப்புகளாகவும் வளர்ச்சி பெற்றன. மதவொழுக்கம் சார்ந்த பிரிவுகள், சாதிக் கட்டமைப்பில் மேல்நிலைச் சாதிகளாக உருவாக்கம் பெற்றன. உடலுழைப்பால் கடினமான தொழிற்பிரிவுகளோ, சாதிக் கட்டமைப்பில் கீழ்நிலைச் சாதிகளாக உருவாக்கம் பெற்றன. அவற்றுள்ளும் பொருளுடைமை அல்லது நிலவுடைமை இல்லாத உட்பிரிவுகள், இன்னும் கீழ்நிலையாகக் கட்டமைக்கப்பட்டன.

## தொழிலும் சாதியும்:

செக்குத் தொழில் மேற்கொண்டோர் 'செக்கார்' என்றும், பறை அடிக்கும் தொழிலை மேற்கொண்டோர் 'பறையர்' என்றும், வேளாண் தொழில் மேற்கொண்டோர் 'வேளாளர்' என்றும், தொழில்சார்ந்த சாதியப் பெயர்களால் மக்கள் அடையாளப்படுத்தப்பட்டனர். வருணாசிரமத்தின் அடிப்படையிலான சாதியக் கட்டமைப்புகள் மதம்சார்ந்து வலுப்பெற்றதால், தொழிற் குடிகளில் நிலவிய பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் முரண்பாடு அத்துணைக் கூர்மை அடையவில்லை. இதனால் தொழிற்குடிகளில் காணப்பட்ட பொருளாதார ஏற்றத்தாழ்வு முரண்பாட்டுக் கூர்மையை விடச் சாதியக் கட்டமைப்புகளுக்கிடையே நிலவிய ஏற்றத்தாழ்வு முரண்பாட்டுக் கூர்மை தான் மிகவும் வலுவாகக் காணப்பட்டது. இதன் உச்சகட்ட நிலையை கி.பி.13ஆம் நூற்றாண்டிற்குப் பின் தமிழ்நாட்டு வரலாற்றில் அதிகம் காணலாம்.

தொடக்கக் காலத்தில், நாட்டின் வளர்ச்சி வேளாண் உற்பத்தியைப் பெரிதும் சார்ந்திருந்தது. பண்டமாற்று முறை படிப்படியாகக் குறைந்து, அனைத்து பொருட்களையும் பணத்தைக் கொண்டு வாங்க முடியும் என்ற நிலை ஏற்பட்ட பொழுது, வணிகம் வளர்ந்து வேளாண் தொழிலுக்குப் போட்டியாக உருவெடுத்தது. வணிகர்கள் செல்வந்தர்களாகவும், நிலவுடைமையாளருக்குப் போட்டியாகவும் வளர்ச்சி பெற்றனர். நிலவுடைமைச் சமுதாயமும், வணிகச் சமுதாயமும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட வடிவங்களையும், வளர்ச்சிப் போக்கினையும் கொண்டவையெனினும், பண்டைய காலத்தில் ஒன்றையொன்று சார்ந்தே இருந்தன.

வேளாண் தொழிலில் அரசின் பங்களிப்பும் செல்வாக்கும் அத்தொழில் வளர்ச்சிக்கு பெரிதும் உதவின. [2] வேளாண் தொழில் வளர்ச்சி பெற்ற பொழுது தச்சர், கொல்லர், செக்கார் போன்றோர் மேற்கொண்ட வேளாண்மைக் கருவி சார்ந்த தொழில்களும் வளர்ச்சி பெற்றன. இக்காலக் கட்டத்தில் வோளாண் தொழிலைப் போன்று செக்குத் தொழிலும் மக்களின் அடிப்படைத் தேவையான உணவு மற்றும் எண்ணெய்த் தேவைகளை நிவர்த்தி செய்யும் தொழிலாகக் கருதப்பட்டுள்ளது. இப்போக்கு கி.பி.-10ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் அதிகமாகக் காணப்பட்டது.

## செக்குத் தொழில்:

உடல்நலம் காக்கும் உணவாகவும், இருள் நீக்கி ஒளி தரும் பொருளாகவும் எண்ணெயை அறிந்த மக்கள், அதனை உற்பத்தி செய்வதற்கு உருவாக்கிய கருவியே செக்கு எனப்படும். செக்கில் எண்ணெய் ஆட்டும் தொழிலை மேற்கொண்டவர்கள் 'செக்கார்' என்றழைக்கப்பட்டனர். செக்கார், எண்ணெய் வணிகம் மேற்கொண்ட வணிகச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் செக்காலியர், செக்காட்டி, செக்கான், செக்காத்தி, செக்கு வாணியர், ஜோதி நகரத்தார், திருவிளக்கு நகரத்தார், சங்கரப்பாடியார் என்று பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளனர். செக்கார் வாழ்ந்த இடம் 'செக்காலைச் சேரி' என்றும், செக்குகள் இருந்த இடம் செக்குமேடு, செக்காலை, செக்கடி, செக்கடிமேடு என்றும் அழைக்கப்பட்டுள்ளன. [3]

"அவனி நாராயண பெருந்தெருவிற்
செக்கார் ஒழுகைக்கு மேற்கும்..." [4]

"செக்காலைச்சேரி இருபதின் கழஞ்சு
பொன் குடுத்து..." [5] என்ற கல்வெட்டுத் தொடர்களும்,

"தயில வினைத் தொழில் மரபில்
சங்கரப்பாடி தெருவு...." என்ற பெரிய புராண அடிகளும், செக்கார் வாழ்ந்த இடங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

செக்காரில், 1) ஊரின் தேவையையும் கோயிலின் தேவையையும் பூர்த்தி செய்தவர்கள் செக்காலைச் சேரியிலும், 2) செக்கிலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெயைப் பிற இடங்களுக்குக் கொண்டு சென்று வணிகம் மேற்கொண்டவர்கள் நகரம் அல்லது மணிக்கிராமத்திலும் வாழ்ந்துள்ளனர். இது, இவர்களுக்குள்ளேயே நிலவிய செல்வ வேறுபாட்டு நிலையைக் காட்டுகிறது.

## இலக்கியங்களில் செக்கு:

சங்க இலக்கியங்களில் செக்கார் பற்றிய செய்தி அதிகம் காணப்படவில்லை எனினும், சிலப்பதிகாரத்தில் 'ஓசுநர்' என்ற எண்ணெய் வணிகர்கள் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. கி.பி.4-5ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே, இம்மக்களைப் பற்றிய செய்திகள் கல்வெட்டுகளிலும் இலக்கியங்களிலும் அதிகம் காணப்படுகின்றன. நாலடியாரிலும், திருவாய்மொழியிலும், திருத்தொண்டர் திருவந்தாதியிலும். பெரிய புராணத்திலும், பிங்கல நிகண்டிலும், காளமேகப் புலவர் பாடிய பாடலிலும், ஜெயங்கொண்டார் பாடலிலும், செக்கு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

மக்களின் அடிப்படைத் தேவையான உணவு, உடை, உறையுள் ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக செக்குத் தொழிலும் கருதப்பட்டுள்ளது. எண்ணெயின் தேவையும் பயன்பாடும், மக்களின் அன்றாட உணவு வாழ்வில் அவசியமானதால், மக்களின் அடிப்படைத் தேவையை நிவர்த்தி செய்யும் உற்பத்திக் கருவிகளுள் ஒன்றாகச் "செக்கு" இருந்துள்ளது. அதனால் ஊரிருக்கையின் அருகிலும், கோயில்களின் அருகிலும் செக்கினை நிறுவி, ஊர்மக்களின் எண்ணெய்த் தேவையையும், கோயில்களின் எண்ணெய்த் தேவையையும் நிவர்த்தி செய்துள்ளனர்.

## கல்வெட்டுகளில் செக்கு:

முதலாம் பராந்தக சோழனின் பதினைந்தாவது ஆட்சியாண்டில், திருவிடைமருதூருக்கு அருகில், அய்யப்பாடி என்ற ஊர் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது. அவ்வூரில் அமைக்கப்பட வேண்டிய மாளிகை, மரங்கள், பூந்தோட்டங்கள் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு, இறுதியில் "பெருஞ்செக்கு" நிறுவப்பட வேண்டும் [6] என்று கல்வெட்டில் வலியுறுத்துவதிலிருந்து

அக்காலக் கட்டத்தில் செக்கின் பயன்பாடு மக்களின் அன்றாட வாழ்வில் முக்கிய இடம் பெற்றிருந்ததை அறிய முடிகிறது.

*“காவும் தெங்கும் இடம்பெறுவதாகவும்*
*தமனகமும்*
*இருவாசியும் மருவும் செண்பகமும்*
*செங்கழுநீரும்*
*மாவும் பலாவும் கமுகும் பனையும்*
*உள்ளிட்டருவில்*
*பயன் மரமும் நடவும் இடவும் (பெறுவ)*
*தாகவும் இட்ட*
*தெங்கும் பனையும் ஈழமுடறபெறாததாகவும்*
*பெருஞ்செக்கிடப் பெறுவதாக” [6]*

என்ற அக் கல்வெட்டில் செக்கின் முக்கியத்துவம் கூறப்பட்டுள்ளது.

1) வேளாண் நிலங்களை உடைமையாகப் பெற்றோர் பெருங்குடிகள்: காணியுடையார், நிலக்கிழார், நில உடைமையாளர், உழுவித்துண்போர் என்றும், 2) அவ் வேளாண் நிலங்களில் நேரிடையாக உழைப்பைச் செலுத்தி உற்பத்தி செய்தோர்: உழுகுடிகள், உழவர், உழுதுண்போர், உடைமையற்றோர் என்றும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய ஏற்றத்தாழ்வான படிநிலையைக் கொண்ட நிலவுடைமைச் சமுதாய அமைப்பு கி.பி.10ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் இருந்துள்ளது. இத்தகைய நிலவுடைமைச் சமுதாய அமைப்பு, மதம்சார்ந்த வருணாசிரமத்தின் பிறப்பின் அடிப்படையிலான சாதியக் கட்டமைப்புக்கு உட்பட்ட நிலையில், இன்னும் அதிக முரண்பாட்டுக் கூர்மையுடன் காணப்பட்டுள்ளது. இதனால், வெவ்வேறு சாதிகளில் உயர்வு தாழ்வு கற்பித்தது போதாதென்று, ஒரு குறிப்பட்ட தொழிற்குடிக்கு உள்ளேயே உடைமையாளர் உயர்ந்தவராகவும், உடைமையற்றவர் தாழ்ந்தவராகவும் கூடக் கருதப்பட்டுள்ளனர். இத்தகைய ஏற்றத் தாழ்வுகளும் முரண்பாடுகளும் உற்பத்திச் சாதனங்களை உடைமையாகப் பெற்றிருந்த அனைத்து தொழிற்குடிகளிலும் உள்வேறுபாடாக வெளிப்பட்டன.

## உடைமையாளரும் உழைப்பாளரும்:

அதே போல் செக்குத் தொழிலிலும், செக்குகளை உடைமையாகப் பெற்ற செக்குடைமையாளர்களும், செக்குகளில் உழைப்பைச் செலுத்தி உற்பத்தி செய்த உடைமையில்லாத செக்காரும் இருந்துள்ளனர். நிலங்களைத் தன் உடைமையாக வைத்திருந்த நிலவுடைமையாளரைப் போன்று, செக்கினை உடைமையாக வைத்திருந்த செக்குடைமையாளரும் இருந்துள்ளதைக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், கூடலூர் நத்தமேட்டில் கண்டறியப்பட்ட செக்கின் உரல் பகுதியில்,

*“ஸ்ரீ பிடாரன் மல்லன் செக்கு” [7]*

என்று பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில், பிடாரன் மல்லன் என்பவன் செக்குக்கு உரியவனாகக் காட்டப்பட்டுள்ளான். இச் செக்கு, பிடாரன் மல்லன் என்பவனுக்கு உடைமையானதாகும். இதனைப் போன்று, செஞ்சி வட்டம் ஏம்பலம் என்ற ஊரின் நத்தமேட்டுப் பகுதியில் காணப்படும் செக்கின் மீது,

*“ஸ்ரீ நொப்பிக்கலி*
*ஏறாழி மகன்*
*மாதேவன் செக்கு” [8]*

என்று பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில், ஏறாழி என்பவனின் மகன் மாதேவன் என்பவன் செக்குக்கு உரியவனாகவும், செக்குடைமையாளனாகவும் காட்டப்பட்டுள்ளான். இதனைப் போன்று கருவூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம்

வட்டம், பழைய ஜெயங்கொண்ட சோழபுரம் நத்தமேட்டிலுள்ள செக்கின் மீது,

''ஸ்ரீ வடுகம்பட்டன் தன்னுடைய செக்கு
வீசம்பட்டனுக்கு நகர மறிய பேர்பெறு
குடுக்க இந் நகரமறி பிடாரியிக்கு
திருவிளக்கினுக்கு நீர (க) ட்டிக் குடுத் (தா) ன்
வீசம் பட்டன் இச் செக்கு''. [9]

என்று பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் "ஸ்ரீவடுகம்பட்டன் தன்னுடைய செக்கு" என்று குறிப்பிடுவதன் மூலம், வடுகம்பட்டன் செக்குடைமையாளன் என்பதை உறுதிப்படுத்தலாம். செக்குடைமையாளனான 'வடுகம்பட்டன்' தன்பெயர் நிலைத்து நிற்கும் பொருட்டு, தன்னுடைய செக்கினை ஊரார் அறிய அவ்வூர்ப் பிடாரிக் கோயிலுக்கு, வீசம்பட்டன் மூலம் தாரை வார்த்துக் கொடுத்துள்ளான். வடுகம்பட்டன், பிடாரிக் கோயிலுக்குத் தன் செக்கினை நேரிடையாக வழங்காமல், வீசம்பட்டன் மூலம் தாரை வார்த்துக் கொடுத்துள்ளதால், 'வீசம்பட்டன்' என்பவன் கோயில் நிருவாகப் பொறுப்பில் இருந்த செக்கார் குடி உட்பிரிவான சங்கரபாடியானாக இருந்திருக்க வாய்ப்புள்ளது. ஏனெனில், கோயில் நிருவாகத்தில் பங்குபெற்ற செக்காரான சங்கரபாடியாரே கோயில் விளக்குகளுக்குக் கொடைகளைப் பெறும் பணியினையும் அதனைப் பராமரிக்கும் பணியினையும் மேற்கொண்டனர்.

வடுகம்பட்டன், செக்குடைமையாளன் என்ற நிலையிலிருந்து, செக்குடைமையற்றவன் என்ற நிலைக்குத் தள்ளப்பட்ட பொழுது, இந்நிகழ்வுகள் நடந்துள்ளதைக் கல்வெட்டின் மூலம் அறிய முடிகிறது. வடுகம்பட்டன், வரி செலுத்த இயலாத சூழ்நிலையில், தனது செக்கினை வரிவிலக்குப் பெற்ற பிடாரிக் கோயிலுக்கு வழங்கி, அதன் மூலம் தன் பேரையாவது நிலைக்கும்படி செய்திருக்கலாம். ஆட்சியாளர்கள் வரி செலுத்தாத மக்களிடம், 'மண்கலம்' தகர்ந்து வெண்கலம் பறித்து, வரியினைப் பெற்ற வரலாற்றுத் தகவல் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. [20] ஆட்சியாளர்களின் கடுமையான வரி விதிப்பிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, வரிவிலக்குச் சலுகை வழங்கப்பட்ட கோயிலுக்குச் செக்கினை வீசம்பட்டன் வழங்கியுள்ளதை உறுதிப்படுத்த முடிகிறது.

திருவண்ணாமலைக்கு அருகில் ஆலையூர் நத்தமேட்டில் காணப்படும் செக்கின் மீது,

''சகர யாண்டு எண்ணூற் றெழுபத்தின் நேழு
வாண கோபாடில் பெந்னை வடகரை
க் காட்டாம் பூண்டியுடைய செக்கிழான்
உலகளந்தான் வீரட்டனி
ட்ட செக்கு இதி ரெட்டினான் தேவனார்
கொரு முறள் யெண்ணை'' [10]

என்று பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில், செக்கிழான் உலகளந்தான் வீரட்டன் என்பவன் "செக்கிழான்" என்ற சொல்லின் மூலம் செக்குடைமையாளனாகக் காட்டப்பட்டுள்ளான் (கிழான் என்பது உரிமையாளனைக் குறித்த சொல்). நிலவுடைமையாளன் "நிலக்கிழான்" என்று அழைக்கப்பட்டதைப் போன்று, செக்குடைமையாளன் "செக்கிழான்" என்று அழைக்கப்பட்டிருப்பது செக்காரில் செக்குடைமையாளர் இருந்துள்ளதை உறுதிப்படுத்துகின்றது.

## செக்கு மீதான வரிகள்:

செக்குத் தொழில் மீது விதிக்கப்பட்ட வரிகள், அதன் வணிகத் தன்மைக்கேற்ப, செக்குக்கடமை, செக்கார்ப்பாட்டம், செக்காயம், செக்கிறை, செக்குக்காணம், போன்ற பெயர்களில் வசூலிக்கப்பட்டுள்ளன.

கி.மு.3ஆம் நூற்றாண்டில் உப்பளங்களில் அரசின் அனுமதி பெற்றே உப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. அனுமதி இன்றி உப்பு

தயாரிப்பது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்பட்டுள்ளது என்று கவுடில்யர் தனது அர்த்த சாஸ்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். [11] பல்லவர் காலத்தில் "உப்புக்கோச் செய்கை" என்ற தொழில் வரியை அரசுக்குச் செலுத்திவிட்டு உப்பினைத் தயாரித்துள்ளனர். [12] இதனைப் போன்றே, செக்குத் தொழிலுக்கும் 'செக்கு' – என்ற பெயரில் தொழில்வரி வசூல் செய்யப்பட்டுள்ளதைக் கல்வெட்டில் காணமுடிகிறது. பொதுச் சொத்தான ஊரின் செக்காக அல்லாமல், தனியார் செக்குகளையும் நிறுவிட வாய்ப்பளிக்கப்பட்ட போது, செக்கார் சமூகத்திலிருந்த உடைமையாளர்கள் உரிமக் கட்டணம் செலுத்தி அரசின் அனுமதியினைப் பெற்றுச் செக்குத் தொழிலை மேற்கொண்டுள்ளனர்.

"..........இருபதின்மர் சதுர்பேதிகளுக்கு பிரம்மதேயமாக கொடுத்து இவ்வூர் மனையும் மனைப்படப்பும் ஊராள்ச்சியும் செக்கும் தறியும் கூலமும் தரகும் கத்திக்காணமும்." [13]

என்ற கல்வெட்டில், "செக்கும் தறியும்" என்பதில் செக்கு என்பது செக்குத் தொழில் உரிமம் (Licence Fee For Oil Crusher) ஆகும். தறி என்பது நெசவுத் தொழில் உரிமம் (Licence Fee For Textile) ஆகும். கி. பி.3ஆம் நூற்றாண்டிலும் கி. பி.7-ஆம் நூற்றாண்டிலும் வசூலிக்கப்பட்ட உப்புத் தொழில் உரிமத்தைப் (Licence Fee For Salt Industry) போன்று, "செக்கு" என்ற பெயரில் உரிமக் கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு செக்குத் தொழில் உரிமம் வழங்கப்பட்டுள்ளதை இக்கல்வெட்டின் மூலம் அறியலாம். "செக்கு" என்று குறிப்பிடப்படுவது பொதுவாகச் செக்கிலிருந்து வெளிப்படும் எண்ணெய் மீது இடப்பட்ட வரியாக இருந்த போதிலும், அது செக்கு இயந்திரங்களை (செக்கு) நிறுவுவதற்கு அரசால் வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணமே ஆகும். [14]

## பொருளாதார நிலையும் சமூகச் சாதி நிலையும்:

செக்குடைமையாளர்கள், செக்கிலிருந்து உற்பத்தி செய்த எண்ணெயில், உடலுழைப்புச் செக்காருக்கு வழங்கிய கூலி போக, எஞ்சிய பெரும்பகுதி எண்ணெயைச் "செக்கு வாணியர்" என்ற பெரும் எண்ணெய் வணிகர்களைக் கொண்டு வணிகம் மேற்கொண்டுள்ளனர். இத்தகைய பெரும்வணிகச் செக்காரே பிற்காலத்தில், தாழ்த்தப்பட்ட சாதிக்குள் பிறந்தாலும் அதன் உட்பிரிவுகளில் உயர்ந்தவர்களாகக் கருதப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஊர் மற்றும் கோயில் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இத்தகைய செக்கார், "சங்கரபாடியார்" என்றும் அழைக்கப்படுவதைக் கல்வெட்டுகளில் காணலாம்.

இவர்களைப் போன்று, அரசகுடும்பத்திற்கு ஆடைகள் நெய்த "பட்டசாலியர்" என்ற நெசவாளர்களின் தொழில்/பொருளாதார உயர்வினைக் கருத்தில் கொண்டு, உத்தமச் சோழன் (கி. பி.970-985) காலத்தில், கோயில் நிதிக் கணக்குகளைப் பரிசோதிக்கும் பணி, அப் பட்டசாலியரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. [15]. இத்தகைய நிகழ்வுகளின் மூலம், ஒவ்வொரு தொழிற்குடிக்குள்ளும் அந்தச் சாதி தாழ்த்தப்பட்டதே ஆனாலும், அதன் உட்பிரிவுகளுள் பொருளுடைமையையும் வசதியையும் கருத்தில் கொண்டு சற்றே மதிப்பளிக்கப் பட்டுள்ளமை அறிய முடிகிறது.

சங்கரபாடியார், வாணியர், மணிக்கிராமத்தார், திசையாயிரத்து அய்ந்நூற்றுவர், அஞ்சுவண்ணத்தார், நானாதேசிகள் போன்ற வணிகக் குழுக்கள், கோயில் ஆட்சிக் குழுவில் பங்கெடுத்துக் கொண்டன. சங்கரபாடியார் என்ற செக்கார் உட்பிரிவு, கோயில் நிருவாகத்தில் பங்குபெற்றதோடு, கோயில் விளக்குகளுக்கு எண்ணெய் வழங்கி, நந்தா விளக்கு அளித்து,

அவற்றைப் பாதுகாக்கும் பணியினையும் செய்தனர். அவ்விளக்குகள் எரிவதற்காகக் கொடைகளைப் பெற்று அக்கொடைகளைப் பராமரிக்கும் பணியினையும் மேற்கொண்டனர். [16]

‘திருக்கோயிலூர் சபையோம் நகரந் திருக்கோயிலூர் சங்கரபாடியோம்; [17]

‘திருநெல்வேலிச் சுத்தவல்லிப் பெருந்தெருவிற் சங்கரன்பாடியார் எண்ணெய் அளப்பாராக’ [18]

‘ஆமூர் கோட்டத்து மாமல்லபுரமாகிய சனனாதபுரத்துச் சங்கரபாடியான் கொள்ளம்பாக்கிழான் மாதேவன் எட்டி வைத்த திருநொந்தா விளக்கொன்று’ [19]

என்ற கல்வெட்டுத் தொடர்கள் இதனைப் புலப்படுத்துகின்றன.

“இறைக்குடிகளில் பொன்காணவல்லா ரெனப்படுவாரை நோக்கி மாடவீதியார் கூடிக் குடவோலை எழுதிப் புகவிட்டு தங்கள் சேரியில் நால்வரைக் குடவோலையில் போந்தாரைக் கொள்வதாகவும் இப்பரி சே(னை)-யிலும் இருவரைக் கொள்வதாகவும் இப்பரிசெய் சங்கரப்பாடியிலும் மூவரை(க்) கொள்வதாகவும் இவர்களெல்லா ஜனத்துக்கு மொக்க பொன் காண்பா(ர்)களாகவும்” [20]

என்ற கல்வெட்டுத் தொடர்கள், கோயிலுக்குக் கொடையாக வழங்கப்பட்ட பொன்னின் தரத்தைச் சோதிக்கும் குழுவில் “சங்கரபாடியார்” இடம் பெற்றிருந்ததை உறுதிப்படுத்துகின்றன. இக்கல்வெட்டுகளின் மூலம், சங்கரபாடியார் என்ற உடலுழைப்பு இல்லாத வசதியான செக்கார் உட்பிரிவுக்கு அளிக்கப்பட்ட மதிப்பை அறியலாம். கோயில்களுக்குப் பொருள் காணிக்கை செலுத்துவதைப் போன்று மக்கள் “செக்குக் காணிக்கையும்” செலுத்தியுள்ளனர். கரூர் வட்டம், வெள்ளியணை என்ற ஊரின் நத்தமேட்டுப் பகுதியிலுள்ள செக்கின் மீது,

“ஸ்வஸ்திஸ்ரீ சோமூர் மஹா தேவற்க்கு
அஞ்ஞாற்றுவர் இடுவிச்ச செக்கு” [21]

என்று பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில், சோமூர் கோயிலிலுள்ள இறைவனுக்கு விளக்கு எரிப்பதற்காகும் எண்ணெயை ஆட்டுவதற்காகவும், வெள்ளியணையில் இருந்த ‘அய்ந்நூற்றுவர்’ வணிகக்குழு, செக்குகளைத் தானமாக வழங்கியுள்ளதை அறிய முடிகிறது. இவ்வாறு கோயிலுக்குக் கொடையாக வழங்கப்பட்ட செக்குகளைச் செக்காரிடம் மானியமாகவோ வாரமாகவோ கொடுத்துப் பிரதியாக அவர்கள் கோயிலுக்கு வழங்க வேண்டிய எண்ணெய் அளவினை நிர்ணயம் செய்து, அதனைக் கண்காணிக்கும் பணியினையும் கோயில் நிருவாகத்திலிருந்த ‘சங்கரபாடியார்’ எனும் செக்கார் மேற்கொண்டனர். செக்குகளில் எண்ணெய் ஆட்டுவோரிடமிருந்து ‘செக்குக் கடமை’ என்ற வரி வசூலிக்கப்பட்டுள்ளது.

### ஊதியக்கூலியும் சமூகநீதியும்:

“கடமை” என்பது அரசு அல்லது ஊர் நிலங்களை அளந்து, உழவர்களிடம் வாரமாகவோ மானியமாகவோ வழங்கி, அதன் விளைச்சலுக்கேற்பப் பெற்ற வரியாகும். போலவே, ஊர்ப் பொதுவில் அமைக்கப்பட்ட செக்குகளையும், அரசுக்குத் தேவையான எண்ணெயை ஆட்டுவதற்கு அமைக்கப்பட்ட செக்குகளையும், கோயிலுக்குத் தானமாக வழங்கப்பட்ட செக்குகளையும், செக்காரிடம் மானியமாகவோ வாரமாகவோ வழங்கிப் பிரதியாக அவர்களிடமிருந்து பெற்ற வரியே ‘செக்குக்கடமை’ ஆகும்.

அரசு ஆடைகளை நெய்த நெசவாளர்கள் செலுத்திய வரி தறிக் கடமையாகும். தறிக் கடமை செலுத்திய நெசவாளர்கள், தறி ஒன்றுக்கு ஆறு பணம் ஆண்டு வரியாகச் செலுத்தியுள்ளனர். போலவே செக்காரும், செக்கு ஒன்றுக்கு ஆறு பணம், ஆண்டு வரியாகச் செலுத்தியமை கல்வெட்டுகளின்

மூலம் அறியப்படுகிறது. அவ்வரியை செக்கார் கோயில் மானியம் என்ற பெயரில், எண்ணெயாகக் கோயிலுக்கு வழங்கினர். உடலுழைப்பு செய்த செக்கார்களுக்கு, உழைப்பிற்கான ஊதியமாக எண்ணெய் வழங்கப்பட்டது. உடலுழைப்புச் செக்கார், ஊதியமாகப் பெற்ற எண்ணெயைப் பண்டமாற்று முறையில் கொடுத்துத் தங்கள் தேவைக்கான உணவுப் பொருட்களை மாற்றாகப் பெற்றனர். இத்தகைய செக்கார் கூலித் தொழிலாளராக வாழ்க்கை நடத்தியுள்ளனர்.

''நாதற் கொளி விளக்கேற்ற குடலிலனாய்க்
கும்பத் தயிலம் விற்றுஞ் செக்குழன்றுங் கொள்
கூலியனாய்'' [22]

என்று உடைமையற்ற செக்கார், எண்ணெய் ஆட்டும் கூலித் தொழிலாளர்களாக வாழ்ந்துள்ளதைத் திருத்தொண்டர் திருவந்தாதி குறிப்பிடுகின்றது. சில்லறை எண்ணெய் வணிகம் மேற்கொண்ட சிறுவணிகச் செக்காரும், உடலுழைப்பு செய்த கூலித் தொழிலாளரான செக்காரும், சமூகத்தில் தாழ்ந்த நிலையில் தான் இருந்துள்ளனர்.

எண்ணெய் ஆட்டும் தொழிலையும், எண்ணெய் விற்கும் தொழிலையும் மேற்கொண்ட உடைமையற்ற கூலிச் செக்காரும், சிறுவணிகச் செக்காரும் தாழ்ந்தவர்களாகக் கருதப்பட்டதோடு, அவர்கள்எதிரேவந்தால்கெட்டசகுனமாகவும், எண்ணெய் ஆட்டுவதும், எண்ணெய் விற்பதும் பாவமென்றும், அதனைப் பிறப்பு அடிப்படையிலான வருணாசிரமச் சாதிகளான செக்காரே செய்வது தகுமென்றும் கருதப்பட்டுள்ளது. அது போன்ற கூலிச் செக்கார், தங்கள் இல்ல நன்மை தீமைகளில், உவச்சோ பறையோ இசைக் கருவிகள் ஏதும் கொட்டிக் கொள்ள கூடாதென்ற சமூகக் கட்டுப்பாடுகளும் இருந்துள்ளன.

''ஸ்ரீகாஞ்சி மாநகரில் செப்பேட்டுப்படி
செக்கார் செய்யக் கடவ முறைமை
எண்ணெய்யு மவயிலே கூறி விற்கக் கடவந்
இவனுக்கு உவச்சும் பறையும் கொட்டக்
கடவதல்ல ஒரு துறையில் நிருண்ணக் கடவ
னல்லந்;……'' [23]

என்ற கல்வெட்டுத் தொடரிலும்,

''செக்கூர்ந்து கொண்டாரும் செய்த
பொருளுடையார்
அக்காரம் அன்னார் அவர்க்கு''

என்ற நாலடியார் பாடலிலும் [24]

''ஆடுவதுஞ் செக்கே யளப்பதுவு
மெண்ணெயே
கூடுவதுஞ் சக்கிலியக் கோதையே –
நீடுபுகழ்க்
கச்சிச் செப்பேட்டிற் கணிக்குங்காற்
செக்கார்தாம்
உச்சிக்குப் பின் புகாரூர்'' [25]

என்ற ஜெயங்கொண்டார் பாடலிலும் இக்கருத்து உணர்த்தப்படுகின்றது.

## முடிவுரை:

மனித வரலாற்றில் இயல்பாக அமைந்த தொழில்சார்ந்த பிரிவுகள், பிற்காலத்தில் வருணாசிரமச் சனாதனக் கோட்பாடுகளால், பிறப்பின் அடிப்படையில் தொழில்சார்ந்த சாதிக் கட்டமைப்பாக வலுப்பெற்று விட்டன. உடலுழைப்பால் கடினமான தொழிற்பிரிவுகள், சாதிக் கட்டமைப்பில் கீழ்நிலைச் சாதிகளாக உருவாக்கம் பெற்றன. அவற்றுள்ளும் பொருளுடைமை அல்லது நிலவுடைமை இல்லாத உட்பிரிவுகள், இன்னும் கீழ்நிலையாகக் கட்டமைக்கப்பட்டன.

அனைத்து தொழிற்குடிகளிலும் சாதியால் உயர்ந்தவர் x சாதியால் தாழ்ந்தவர் என்ற சாதிய ஏற்றத்தாழ்வும் நிலவியது போதாதென்று உடைமையாளர் x உடைமையற்றவர் என்ற பாகுபாடும் நிலவியது. வேளாண்

தொழிற்குடியில் நிலவுடைமையாளராக விளங்கியோர் சற்றே உயர்ந்தவர்களாகவும், உடலுழைப்புச் செய்த நிலமற்ற உழுகுடிகள் தாழ்ந்தவர்களாகவும் கருதப்பட்டதைப் போன்று, செக்குத் தொழிற்குடியிலும் செக்குடைமையாளராக விளங்கியோர் சற்றே உயர்ந்தவர்களாகவும், உடலுழைப்பு செய்த உடைமையற்ற கூலிச் செக்கார்கள் தாழ்ந்தவர்களாகவும் கருதப்பட்டுள்ளதை மேற்காணும் நிகழ்வுகள் உணர்த்துகின்றன.

நான்காம் வருணமான கீழ்நிலையில் இருந்த வேளாண் தொழிற்குடிக்குள்ளேயே, தாழ்விலும் சற்றே உயர்ந்தவர்களாகக் கருதப்பட்ட நிலவுடைமையாளர்களுக்கு, ஊர் மற்றும் கோயில் நிருவாகத்தில் பொறுப்பளிக்கப்பட்டதைப் போன்றே, செக்குத் தொழிற்குடிக்குள்ளும் தாழ்விலும் சற்றே உயர்ந்தவர்களாகக் கருதப்பட்ட செக்குடைமையாளருக்கு ஊர் மற்றும் கோயில் நிருவாகத்தில் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

பிறப்பால் கட்டமைக்கப்பட்ட வருணாசிரமச் சாதியச் சமூகக் கட்டமைப்போடு, பொருளுடைமையும் சேர்ந்து கொண்டால், ஏற்றத் தாழ்வு இன்னும் மோசமாகும் என்ற வரலாற்று உண்மை, இத்தகைய செக்கார் சமூக நிகழ்வுகளின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது. வருணாசிரமக் கோட்பாடுகளில், உடலுழைப்பு என்பது, என்றுமே தாழ்நிலையாகவே கருதப்பட்டுள்ளது என்பது சோகமான உண்மை.

## அடிக்குறிப்புகள் / துணைநூற்பட்டியல்:


1. ஏங்கெல்ஸ், பி, “குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்” - முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ

2. ராசுகுமார், மே.து. தமிழ் நாட்டின் சமூக பொருளியல் வரலாறு—சில குறிப்புகள்

3. இராசகோபால்,சு. “வரலாற்றில் செக்கு” — கல்வெட்டு இதழ் 9 - தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, சென்னை, பக்: 21-22

4. தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி—17, கல். எண். 588

5. தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி—19, கல்.எண். 92, பக்-47

6. தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி—19, கல்.எண். 344, பக்-176

7. கணேசன், நாக. 2002, கரூர் மாவட்டத்தில் புதிய கண்டுப்பிடிப்புகள் – ஆவணம் இதழ்-13, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், பக்-55

8. நம்பிராசன்,எம். 2000, ஏம்பலம் செக்குக் கல்வெட்டு, ஆவணம் இதழ்-11, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சை, பக்-17.

9. கணேசன், நாக. 2002, கரூர் மாவட்டத்தில் புதிய கண்டுப்பிடிப்புகள், ஆவணம் இதழ்-13, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், பக்-55

10. சுபாஸ் சந்திர போஸ்,லெ. 2002 திருவண்ணாமலை ஆடையூர் செக்குக் கல்வெட்டு, பழங்காசு காலாண்டிதழ்-6, பக்-18.

11. Meenachi. C 1938 “ADMINISTRATION AND SOCIAL LIFE UNDER THE PALLAVAS”, University of Madras, Madras.

12. காசிநாதன், நடன.,1981, ”உப்பு” — தமிழ்நாட்டு வரலாற்றுக் கருத்தரங்கு (1979), வரலாற்றுப் பேரவை, சென்னை, பக்:81-85

13. தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி—1, கல்.எண்.151, கூரம் செப்பேடு—6-பி

14. Meenachi. C 1938 “ADMINISTRATION AND SOCIAL LIFE UNDER THE PALLAVAS”, University of Madras, Madras.

15. அப்துல் மஜீத்.அ, 1978 “நெசவுத்தொழிலும் காஞ்சியும்” - செங்கை

மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு, வரலாற்றுப் பேரவை, சென்னை—2, பக்: 69

16. கிருஷ்ணன்,அ, 1991, "கல்வெட்டில் வாழ்வியல்" - மணிவாசகர் பதிப்பகம், சென்னை 1 பக்கம்: 225—226

17. தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி—1, கல்.எண்-55

18. தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி—8, கல்.எண்-705.

19. தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி—23, க.எண்-98

20. தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி—6, க.எண்-295.

21. கணேசன், நாக. 2002, "அய்ந்நூற்றுவர் செக்குக் கல்வெட்டு" – ஆவணம் இதழ்-11, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், பக்: 25

22. நம்பியாண்டார் நம்பி அருளிய திருத்தொண்டர் திருவந்தாதி, பாடல்-54

23. தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி—7, கல்.எண்-865.

24. நாலடியார் பாடல்-374.

25. இராசகோபால்,சு.1977, "வரலாற்றில் செக்கு"—கல்வெட்டு இதழ்-9, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, பக்: 21—22

## ஆசிரியர் குறிப்பு:

முனைவர். நாக கணேசன் அவர்கள், தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறையில் மண்டல உதவி இயக்குநர் – தொல்லியல் துணைக் கண்காணிப்பாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். பணி ஓய்வுக்குப் பின் இந்து சமய அறநிலையத் துறையில், தொல்லியல் வல்லுநர் குழு உறுப்பினராகப் பணியாற்றுகின்றார்.

அகழாய்வுப் பணிகள், கல்வெட்டுகளைப் படியெடுத்தல் மற்றும் படித்தல், நூலாக்கம் செய்தல் போன்ற பல பணிகளில் வல்லவர். அழகன்குளம், கரூர் நெடுங்கூர் போன்ற தொல்லியல் களங்களில் பணியாற்றி, சற்றேறக்குறைய 300 கல்வெட்டுகளைக் கண்டுபிடித்து ஆவணமாக்கம் செய்துள்ளார்.

செக்குக் கல்வெட்டுகள், வணிகக் குழு கல்வெட்டுகள், நடுகல் கல்வெட்டுகள், கண்மாய்க் கல்வெட்டுகள், கோயில் கல்வெட்டுகள், பாறைக் கல்வெட்டுகள், சமணப் படுகைகள், புத்தர் & சமணத் தீர்த்தங்கரர் சிற்பங்கள், செப்புப் பட்டயங்கள் பல, இவரின் கண்டெடுப்புகளுள் அடக்கம்.

தஞ்சை 8ஆம் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு, கோவை தமிழ்ச் செம்மொழி மாநாடுகளில் ஆய்வுக்கட்டுரை அளித்துள்ளார். செம்மொழி மாநாட்டில் இவர் தலைமையில் வடிவமைக்கப்பட்ட தொல்லியல் காட்சி அரங்கினை, அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு. கலைஞர்.

மு. கருணாநிதி அவர்கள் வெகுவாகப் பாராட்டியதோடு, கலைஞர் கரங்களால் சான்றிதழும் நினைவுப் பரிசும் நாக. கணேசன் பெற்றுள்ளார்.



செக்கு (எழுத்துப் பொறிப்புடன்) கி.பி.10ஆம் நூற்றாண்டு,
கீழவளவு மதுரை மாவட்டம்.



செக்கு (எழுத்துப் பொறிப்புடன்) கி.பி.10ஆம் நூற்றாண்டு,
கீழவளவு, மதுரை மாவட்டம்.



செக்கு (எழுத்துப் பொறிப்புடன்) கி.பி.8ஆம் நூற்றாண்டு, வெள்ளியணை,
கரூர் மாவட்டம்.



செக்கு (எழுத்துப் பொறிப்புடன்) கி.பி.10ஆம் நூற்றாண்டு,
பழைய ஜெயங்கொண்டசோழபுரம், கரூர் மாவட்டம்.



செக்கு (எழுத்துப் பொறிப்புடன்) கி.பி.10ஆம் நூற்றாண்டு,
பழையஜெயங்கொண்டசோழபுரம், கரூர் மாவட்டம்.



செக்கு (எழுத்துப் பொறிப்புடன்) கி.பி10ஆம் நூற்றாண்டு, கூடலூர், கரூர் மாவட்டம்.



செக்கு (எழுத்துப் பொறிப்பு இல்லாமல்) கி.பி10ஆம் நூற்றாண்டு,
பூலாங்குறிச்சி, சிவகங்கை மாவட்டம்.

# கலைஞர் நூற்றாண்டு நூலகம்
## – சமூகநீதிப் பார்வையில் ஓர் அறிமுகம்

முனைவர் வா. நேரு



**கட்டுரைச் சுருக்கம்:**

*மதுரையில் அண்மையில் நிறுவப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகம் பற்றிய அறிமுகத்தை வழங்கும் இக் கட்டுரை, சமூகத்தில் பொதுநூலகம் என்னும் அமைப்பு, எவ்வாறு அறிவுத் தேடலையும் கல்வியையும் எல்லாப் பிரிவு மக்களுக்கும் எளிதில் வாய்க்கச் செய்து, வாசிப்பறிவில் சமத்துவம் என்னும் நிலையைக் கொண்டு வந்து, அதன் வாயிலாகச் சமூகநீதியை நிலைநாட்டுகிறது என்பதை ஆய்கிறது.*

**முன்னுரை - ஆங்கிலேய வித்து:**

“பொது நூலகங்கள் என்பன பொதுமக்கள் எவரும் சென்று படிக்கக்கூடிய நூல்களை உள்ளடக்கிய நூலகங்களாகும். எழில் மிகுந்து விளங்கும் இங்கிலாந்து நாட்டில் ஏறத்தாழ கி.பி.18ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே பொது நூலகங்கள் நிறுவப்பட்டு விட்டன என்று கூறலாம்” (1) என்று ஆ.திருமலை முத்துசுவாமி குறிப்பிடுகிறார். அவர் தனது 'முதல் பொது நூலக இயக்கம்' என்னும் நூலில், ஆங்கிலேயர்களால் ஏற்படுத்தப்பட்ட பொது நூலகங்கள் பற்றியும், அந்நூலகங்களின் வகைகள், பயன்கள் பற்றியும் அந்த நூலில் விரிவாகக் குறிப்பிடுகிறார். பொது நூலகங்கள் மக்களுக்கு எவ்வளவு அவசியமானவை என்னும் புரிதல், உலகில் ஆங்கிலேயர்களுக்குத் தான் முதன்முதலில் ஏற்பட்டது எனலாம்.

இந்திய சுதந்திரத்திற்கு முந்தைய சென்னை மாகாணத்தில் நிறுவப்பட்ட முதல் பொது நூலகம், சென்னையில் அமைந்துள்ள கன்னிமாரா நூலகம். இந்த நூலகம் 1890இல் பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது. கன்னிமாரா நூலகத்தின் ஆரம்பம் 1860இல் தொடங்குகிறது. அன்றைய பிரிட்டிசு இந்தியப் பேரரசின், மதராஸ் மாகாண, மதராஸ் அருங்காட்சியகத்தின் ஒரு பகுதியாகச் சிறு நூலகம், கேப்டன் ஜீன் மிட்சொல் என்பவரால் தொடங்கப்பட்டது. இங்கிலாந்தின் எய்லிபரி (Aylesbury) கல்லூரியில் நூற்றுக்கணக்கான புத்தகங்கள் தேவைக்கதிகமாக இருந்தன. அவை யாவும் மதராஸ் மாகாணத்து மதராஸ் அருங்காட்சியகத்துக்கு அளிக்கப்பட்டன. பிரிட்டிசு அருங்காட்சியக-நூலக மாதிரியின் அடிப்படையில் அமைக்கப்பட்ட இந்நூலகம், 1890 வரை அருங்காட்சியகத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. அன்றைய மதராஸ் மாகாணத்தின் ஆளுநராக இருந்த கன்னிமாரா பிரபு, மாகாணத்துக்கான பொது நூலகம் அமைக்கும் தேவையை உணர்ந்து, 1890-ஆம் ஆண்டு மார்ச் 22ஆம் நாள் அடிக்கல் நாட்டினார். 1896ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் நாள் பொதுமக்களுக்குத் திறக்கப்பட்டது.

இந்த நூலகம் திறக்கப்பட்ட போது அவர் ஆட்சியில் இல்லாவிடினும், அவருடைய பெயரே நூலகத்துக்கும் சூட்டப்பட்டது.(2) நம் தமிழ்நாட்டு மக்களுக்கான பொது நூலகமும் ஆங்கிலேயர்களால் தான் சென்னையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

## பார்ப்பனரல்லாதாரின் அறிவுத் தேடல் துவக்கம்:

1890இல் கன்னிமாரா பொது நூலகம் அமைக்கப்பட்டிருந்தாலும், திராவிடர்களில் மிகக் குறைந்த சதவிகித மக்களே அதனைப் பயன்படுத்தும் கல்வி பெற்றிருந்தனர். குறிப்பாக சென்னையில் வசிக்கும் சிலரே அதனைப் பயன்படுத்தும் வாய்ப்பைப் பெற்றிருந்தனர். வர்ண அடிப்படையில் கல்வி மறுக்கப்பட்ட சூத்திரர்கள், பஞ்சமர்கள் எனப்பட்டோரில் பெரும்பகுதியினர்க்கு அங்குச் சென்று படிக்கும் வாய்ப்பு இல்லை. இங்கிலாந்தில் ஏற்பட்ட பொது நூலக இயக்கம் அந்த நாட்டில் அனைத்து மக்களுக்கும் பயன்பட்ட நிலையில், இந்தியாவின் சென்னை மாகாணத்தில் ஏற்பட்ட பொது நூலகம், மிகச் சிறுபான்மையினரான பார்ப்பனர்களுக்கே பெரிதும் பயன்பட்டது.

1900 பார்ப்பனரல்லாதாருள் படித்தவர்கள் சதவிகிதம் மிக மிகக் குறைவு. எழுதப் படிக்கவே தெரியாத நேரத்தில் பொது நூலகத்தில் சென்று படிப்பது எங்ஙனம்? ஏன் நாம் படிக்க வேண்டும்? படிப்பதனால் எப்படியெல்லாம் நாம் உயர முடியும்? ஏன் நூல்களைத் தேடித் தேடிப் படிக்கவேண்டும் என்ற எண்ணத்தைப் பார்ப்பனரல்லாத மக்கள் மனத்தில் விதைத்தது தான் திராவிட இயக்கத்தின் தொடக்கம் எனலாம்.

“இருபதாம் நூற்றாண்டின் துவக்க காலம், குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், 1912ஆம் ஆண்டு. சென்னை நகரில் பணியாற்றிய அரசு ஊழியர்கள் சிலர், தாங்கள் பிராமணரல்லாதாரராய் இருந்த ஒரே காரணத்தினாலேயே, உத்தியோகத் துறையில் புறக்கணிக்கப்பட்டதையும், வேலை-உயர்வு போன்ற நியாயமாகக் கிடைக்க வேண்டிய வாய்ப்புகள் மறுக்கப்பட்டதையும் உணர்ந்து, மனம் புழுங்கிக் கலந்துரையாடவும், இணைந்து செயல்படவும், ஒன்றுபட்டுத் தங்கள் குறைகளை எடுத்துரைக்கவும், 1912ஆம் ஆண்டில் மெட்ராஸ் யுனைட்டெட் லீக் (Madras United League) என்னும் அமைப்பினை உருவாக்கினர். முதன்முதலாக அவர்கள் ஏற்றுக்கொண்ட சமுதாயப்பணி முதியோர் கல்வியாகும். அதன் உறுப்பினர்களாக இருந்த அரசு ஊழியர்களே, தங்களது மாலை நேர ஓய்வுக் காலத்தை இந்தப் பணிக்காகச் செலவிட்டனர் (3). திராவிட இயக்கத்தின் முதல் அமைப்பின் முதல் பணியே கல்வி. இளம்வயதில் படிக்க முடியாதவர்களுக்கு, வயதாகி இருந்தாலும் கல்வியின் பயன் கிட்ட வேண்டும் என்னும் நோக்கம் தான் முதன்மையான நோக்கமாக இருந்திருக்கிறது.

திராவிட இயக்கம் என்பது நீதிக் கட்சி, சுயமரியாதை இயக்கமாக இருந்த போதும், பின்பு திராவிடர் கழகமாக இருந்த போதும், பின்னர் திராவிட முன்னேற்றக் கழகமாக அதிலிருந்து பிரிந்த போதும், ஒரு கிராமத்தில் அல்லது நகரத்தின் பகுதியில், அனைத்து மக்களும் வந்து படிக்கும் படிப்பகங்கள் ஏற்படுத்தப்பட்டன. நூற்றுக்கணக்கான படிப்பகங்கள் தமிழ்நாடு முழுவதும் ஏற்படுத்தப்பட்டன. ஜாதி வேறுபாடுகளைக் கடந்து திராவிட இயக்கத்தவர் என்னும் அடிப்படையில், அங்கு வந்து படித்திருக்கின்றனர். அதனைப் போலவே பொதுவுடைமை இயக்கத்தாலும் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் படிப்பகங்கள் ஏற்படுத்தப்பட்டன.

## பொது நூலகச் சட்டம்:

இந்தியாவிலேயே, சுதந்திரம் பெற்ற பிறகு, சென்னை மாகாணத்தில் தான் முதன்முதலில்

மதராஸ் பொது நூலகச் சட்டம் 1948ல் இயற்றப்பட்டது. பின்னர், இந்தியாவின் பல மாநிலங்கள் இந்தச் சட்டத்தினை முன்மாதிரியாகக் கொண்டு பொது நூலகச் சட்டத்தை இயற்றின. அந்த வகையில் பொது நூலகச் சட்டத்திற்கு, இந்தியாவிற்கே முன்மாதிரி தமிழ்நாடு (சென்னை மாகாணம்) எனலாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி தமிழ்நாட்டில் 1967இல் ஏற்படுகிறது. அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் ஆகிறார். அவரது மறைவிற்குப் பின் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் முதல் அமைச்சர் ஆகிறார். அவரது ஆட்சிக்காலத்தில் 1972ஆம் ஆண்டில் மாநிலப் பொது நூலகச் சட்டம் ஏற்படுத்தப்படுகிறது. அதன் மூலம் தமிழ்நாட்டில் பொது நூலகங்கள் வளர்ச்சி பெறுகின்றன. சொத்து வரி அல்லது வீட்டு வரியில், 10 விழுக்காடு நூலக வரியாக வசூலிக்கப்படுகிறது. அரசின் உதவித் தொகையும் இணைந்து நூலகங்கள், நூலகங்களுக்கான வசதிகள் ஏற்படுத்தப்படுகின்றன.

“தமிழ்நாடு பொது நூலகச்சட்டம் 1948” இன் படி, தமிழ்நாட்டில் பொது நூலகங்கள் நிறுவப்பட்டன. பொது நூலகங்களின் சேவையை மேம்படுத்தும் நோக்கில் 1972-ஆம் ஆண்டில், பொது நூலக இயக்ககம் உருவாக்கப்பட்டது. பொது நூலக இயக்ககக் கட்டுப்பாட்டின் கீழ், தமிழ்நாடெங்கும் பின்வரும் நூலகங்கள் செயல்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | கன்னிமாரா பொது நூலகம் | 1 |
| 2. | அண்ணா நூற்றாண்டு நூலகம் | 1 |
| 3. | மாவட்ட மைய நூலகங்கள் | 32 |
| 4. | முழு நேரக் கிளை நூலகங்கள் | 314 |
| 5. | கிளை நூலகங்கள் | 1612 |
| 6. | நடமாடும் நூலகங்கள் | 14 |
| 7. | ஊர்ப்புற நூலகங்கள் | 1915 |
| 8. | பகுதி நேர நூலகங்கள் | 751 |
| | **மொத்தம்** | **4640** |

இவை தவிர, மக்களின் பயன்பாட்டிற்காக மருத்துவமனைகள், சிறைச்சாலைகள் மற்றும் கடவுச் சீட்டு அலுவலகங்கள் போன்ற இடங்களில் நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன.(4). இவை தமிழ்நாடு அரசின் பொது நூலக இயக்குநர் தரும் விவரங்கள்.

## பொது நூலக இயக்ககத்தின் நோக்கம் & குறிக்கோள்:

தகவல், எழுத்தறிவு, கல்வி மற்றும் கலாச்சாரக் கருப்பொருளை மையமாகக் கொண்டு பொது நூலகச் சேவையானது பின்வரும் இலக்குகளை உள்ளடக்கிச் செயல்பட்டு வருகிறது.

- குழந்தைகளுக்கு இளம் பருவத்திலேயே வாசிக்கும் பழக்கத்தை உருவாக்கி வலுப்படுத்துதல்.
- அனைத்து தரப்பினருக்கும் சுயகல்வி மற்றும் முறையான கல்விக்குத் துணை நிற்றல்.
- தனிமனிதப் படைப்பாற்றலை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை உருவாக்குதல்.
- குழந்தைகள் மற்றும் இளைஞர்களிடையே கற்பனை மற்றும் படைப்பாற்றலைத் தூண்டுதல்.
- பாரம்பரிய கலாச்சார விழிப்புணர்வு ஏற்படுத்துதல், மற்றும் கலைகள், அறிவியல் சாதனைகள், புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல்.
- நடத்து கலைகளின் வளர்ச்சிக்கு உதவுதல்.
- அனைத்துத் தரப்பினருக்குமான கலை, இலக்கிய, கல்வி சார்ந்த செயல்பாடுகளில் பங்கெடுத்தல்.

## குறிக்கோள்கள்:

• நிறைந்த நூலகப் பணியின் மூலம் அனைத்து தரப்பினரின் தகவல் தேவையினைப் பூர்த்தி செய்தல்.

• பழைய மற்றும் அரிய நூல்களை மின்மயமாக்கி, பாதுகாத்தல்.

• 1,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள இடங்களில் நூலகங்களை அமைத்துச் செயல்படுத்துதல்.

• நூலகங்களில் சிறந்த உள்கட்டமைப்பு வசதிகளை அதிகரிக்கச் செய்தல்.

• நூலகங்களில் தரமான நாளிதழ்கள், பருவ இதழ்கள் மற்றும் நூல்களை வாங்கி வழங்குதல்.

• நூலகங்களில் நவீன தொழில்நுட்பத்தினைப் புகுத்தி நூலகச் சேவையினை மேம்படுத்துதல். (5)

இவை தமிழ்நாடு அரசின் பொது நூலக இணையதளம் குறிப்பிடும் நோக்கங்கள். பொது நூலகங்களின் பயன்பாடு என்பது தமிழ்நாட்டின் நகரங்கள், கிராமங்கள் தோறும் இன்று பரவியிருக்கிறது.

## மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம்:

மெட்ராஜ் யுனைட்டெட் லீக் அமைப்பு தோன்றி ஏறத்தாழ 111 ஆண்டுகளுக்குப் பின், மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் 2023ஆம் ஆண்டில், ஜூலை 15ஆம் நாள் (பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பிறந்த நாளில்), தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இது இளம்வயதினர் முதல் 100 வயதுக்கும் மேற்பட்ட முதியவர்களும் படிப்பதற்கான வசதிகள் உள்ள இடமாக இந்தப் பொது நூலகம் அமைந்திருக்கிறது.

“மனிதரெலாம் அன்புநெறி காண்ப தற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவ டைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வ தற்கும்,
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை;
புனிதமுற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்
புத்தகசா லைவேண்டும் நாட்டில் யாண்டும்.”

என்றார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். மதுரையில் அமைக்கப்பட்டிருக்கும் கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகம், மக்களின் மனோபாவம் வானைப் போல் விரிவடைந்து, அன்பு நெறி காண்பதற்கான ஓர் அடித்தளமாக அமைக்கப்பட்டதோ என எண்ணுமளவிற்கு அமைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் அறிவுசார் அடையாளங்களாகச் சென்னையில் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகமும், மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகமும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

“மதுரையில் கட்டப்பட்டிருக்கிற கலைஞர் நூற்றாண்டு நூலகம் குறித்து ஒரே பேச்சாக இருக்கிறதே என்ற ஆச்சரியத்தில், அண்மையில் தான் நான் ஒரு வாசகனாக - எழுத்தாளனாக அங்குப் போனேன். சென்னையில் இருக்கிற அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு அடுத்த பெரிய நூலகம், சமணர் படுக்கை, மதுரைக் காஞ்சி, வைகை நதி, கண்ணகி நீதியை நிலைநாட்டிய இடம், பாண்டியர்களின் தலைநகரம், மீனாட்சி அம்மன் கோயில், சித்திரைத் திருவிழா, நாயக்கர் மகால், தமிழ்நாட்டிலேயே மிகப்பெரிய மாரியம்மன் குளம், சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த - இலக்கியம் வளர்த்த மண் என்று மதுரைக்குப் பல அடையாளங்கள், பெருமைகள் இருக்கின்றன. வரலாற்று அடையாளங்களோடு, நிலவியல், பண்பாட்டு, இலக்கிய அடையாளங்களோடு மற்றுமோர் அறிவுசார் அடையாளமாகச் சேர்ந்திருப்பது

கலைஞர் நூற்றாண்டு நூலகம்" (6) என்று எழுத்தாளர் இமையம் குறிப்பிடுகிறார்.

## கலைஞர் நூற்றாண்டு நூலக அமைப்பு:

மொத்தம் 6 தளங்களைக் கொண்டது இந்த கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகம். அடித்தளத்தில் இருக்கும் வாகன நிறுத்துமிடம் வசதியாக உள்ளது. தரைத்தளத்தில் இருக்கும் கலைக்கூடம் மதுரையின் வரலாற்றை அழகிய படங்களோடும் சிற்பங்களோடும் விவரிக்கும் வண்ணம் உள்ளது.

## தரைத் தளம் - மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள்:

தரைத்தளத்தில் இருக்கும் இரண்டு பிரிவுகள் சமூகநீதி அடிப்படையில் மிக முக்கியமானவை. ஒன்று மாற்றுத் திறனாளிகள் பிரிவு. மிக நவீன வசதிகளொடு பார்வைக் குறைபாடு உள்ள மாற்றுத் திறனாளிகளும் மற்ற மாற்றுத் திறனாளிகளும் புத்தகங்களை வாசிப்பதற்கும் போட்டித் தேர்வுக்காகத் தயாரிக்கும் வண்ணமும் அமைக்கப்பட்டுள்ளன.

## நூலகத்தில் சொந்த நூல்களைக் கொண்டு வந்து படித்தல்:

சொந்த நூல்கள் படிக்கும் பிரிவில் அமர்ந்து படிப்பதற்கு மிகப்பெரும் போட்டியே நூலகத்தில் நடைபெறுகிறது எனலாம். நாம் சில உணவகங்களுக்குச் சென்று, "நான் எனது சாப்பாட்டைப் பையில் கொண்டு வந்திருக்கிறேன். இங்கு ஓர் ஓரத்தில் அமர்ந்து சாப்பிட்டுக் கொள்ளலாமா?" என்று கேட்டால் அனுமதிக்க மாட்டார்கள். ஆனால் தங்கள் சொந்தப் புத்தகங்களைக் கொண்டு வந்து படிக்கும் ஒரு பிரிவு என்பது நூலகத் துறையில் ஒரு பெரும் புரட்சியே எனலாம்.

## நூலகத்தில் திராவிட இயக்க அறிவுக் கோவை:

மதுரையின் அறிவுசார் அடையாளமாக மட்டுமல்ல, திராவிட இயக்கத்தின் அடையாளமாகவும் கலைஞர் நூற்றாண்டு நூலகம் அமைந்திருக்கிறது எனலாம். இந்த நூலகத்தின் வாயிலில் அமைந்திருக்கிற கலைஞரின் சிலை முன் நின்று, வருகின்ற பலரும் புகைப்படங்கள் எடுத்துக் கொள்கிறார்கள். கலைஞரோடு நேரில் உட்கார்ந்து பேசுகிற மாதிரி இருக்கின்ற காட்சித்திரை முன் அமர்ந்து, பலரும் கலைஞரோடு உட்கார்ந்து பேசுவது போல பாவனை செய்கிறார்கள், புகைப்படங்கள் எடுத்துக் கொள்கிறார்கள்.

கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகத்திற்குள் இருக்கும் கலைஞர் அரங்கத்தில், கலைஞரின் அரிய புகைப்படங்கள் அடுத்தடுத்து வரும் காட்சிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கலைஞரின் அத்தனை படைப்புகளும் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்லாமல், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, திராவிட இயக்கத் தலைவர்கள், திராவிட இயக்க எழுத்தாளர்கள் ஆகியோரது படைப்புகளும், பெரியார் சுயமரியாதைப் பிரச்சார இயக்க வெளியீடுகளும் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. திராவிட இயக்கத்தின் சாதனைகளையும், அந்த இயக்கத்திற்கு ஏற்பட்ட சோதனைகளையும் அறிந்து கொள்வதற்கான பெரும்வாய்ப்பு இன்றைய இளைய தலைமுறைக்கு இந்நூல்களின் வழியாகக் கிடைக்கும் எனலாம். அந்தப் பிரிவில் இருக்கும் நூல்களை எடுத்து, உட்கார்ந்து படிக்க அழகிய நாற்காலிகளும், வைத்துப் படிப்பதற்கு ஏற்ற வகையிலான மேசைகளும் அந்த அரங்கில் வைக்கப்பட்டிருக்கின்றன.

## முதல் தளம் - குழந்தைகளுக்கான வசதிகள்:

கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகத்தில் முதல் மாடியில் இருக்கும் குழந்தைகள் பிரிவு புதுமையான தோற்றத்துடன் புத்தம்புதிய நவீன வசதிகளுடன் குழந்தைகளை ஈர்ப்பதாக இருக்கிறது.

நல்ல நூல்களை அடையாளம் காட்டும் பெற்றோர்கள், சமூகப் பொறுப்புள்ள குடிமக்களாகத் தங்கள் குழந்தைகள் வளர்வதற்கு உதவி செய்கின்றார்கள். குழந்தைகள் விரும்பும் புத்தகங்களை அல்லது தாங்கள் விரும்பும் புத்தகங்களைக் குழந்தைகளுக்கு வாங்கித் தரமுடியாத நிலையில் இருக்கும் பெற்றோர்களுக்கு மிகப்பெரிய வாய்ப்பாக மதுரையில் இந்த நூலகம் வந்திருக்கிறது.

அரசுப் பள்ளிகளில், மாநகராட்சிப் பள்ளிகளில் படிக்கும் தங்கள் குழந்தைகளைக் கலைஞர் நூற்றாண்டு நூலகத்திற்கு ஆர்வமாக அழைத்துவரும் பல பெற்றோர்களை நாம் பார்க்கமுடிகின்றது. அதுவும் சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில் நிறைய பேர் தங்கள் குழந்தைகளோடு கலைஞர் நூலகத்திற்கு வருகின்றார்கள்.

நூல்கள், குழந்தைகளுக்கு நல்ல நண்பர்கள். பெற்றோர் வேலைக்குச் சென்றுவிடும் இக்காலத்தில் குழந்தைகளின் தனிமைக்கு ஆக்கமான துணையாக நூலகங்கள் இருக்கின்றன. நல்ல புத்தகங்கள் குழந்தைகளுக்கு நல்ல பண்புகளைக் கற்றுத் தருகின்றன. குழந்தைகளை வளர்ப்பதில் பெற்றோர்க்குத் துணைபுரிகின்றன.

## நூலகத்தில் அறிவியல் மனப்பான்மை:

குழந்தைகளுக்குஅறிவியல்மனப்பான்மை ஏற்படுவதற்கு அறிவியல் பற்றிய புரிதல் மிக அவசியம். இந்த அண்டவெளி பற்றியும், கோள்கள் பற்றியும் அறிந்து கொள்ளுதல் குழந்தைகளுக்குப் பெரும் விழிப்புணர்வைத் தரும். அப்படி ஒரு விழிப்புணர்வைத் தரக்கூடிய பகுதியாக கலைஞர் நூற்றாண்டு நூலகத்தின் முதல் மாடியில், கலைஞர் அரங்கத்திற்கு அருகில் அறிவியல் அரங்கம் என்ற பகுதி இருக்கிறது.

அங்கே பயிற்சி விமானம் ஒன்றும் இருக்கிறது. உள்ளே ஏறி உட்கார்ந்து விமானத்தில் பறக்கும் உணர்வைப் பெறலாம். நாம் பூமியில் இருக்கிறோம். இங்கே எடை 70 கிலோ, அவர் செவ்வாய்க் கிரகம் சென்றால் அல்லது மற்ற கோள்களுக்குச் சென்றால், எவ்வளவு எடை இருப்பார்? என்பதையெல்லாம் அறிவிக்கும் கருவி இருக்கிறது. உலக உருண்டை மிகப்பெரிய அளவில் இருக்கிறது. குழந்தைகள் அதை உருட்டி உருட்டி ஒவ்வொரு கண்டமாகக் கண்டு உணரலாம்.

மனித உடலின் உறுப்புகள் ஒவ்வொரு பகுதியாக நாம் கண்டு அறிந்து கொள்ளும் விதமான நவீனத்துடன் அமைக்கப்பட்டு இருக்கின்றது. இந்த அறிவியல் அரங்கம் பல புதிய சிந்தனைகளைக் குழந்தைகளிடம் விதைக்கவல்ல விதையாக இருக்கிறது.

## நூலகத்தில் மொழியாளுமை:

குழந்தைகள் பிரிவில் தமிழில், ஆங்கிலத்தில் குழந்தைகளுக்கான கதைப் புத்தகங்களும், அறிவியல் புத்தகங்களும் நிறைய உள்ளன. தங்களுக்குப் பிடித்த புத்தகங்களைக் குழந்தைகள் தாங்களே தேர்ந்தெடுத்துப் படிக்கும்போது இலக்கியங்கள் மீதான அறிமுகம், புரிதல் போன்றவை கிடைக்கின்றன. வாசிப்பு அனுபவத்தில் கிடைக்கும் மகிழ்ச்சியை இளைய வயதிலேயே குழந்தைகள் பெறும் அருமையான வாய்ப்பினைக் கலைஞர் நூற்றாண்டு நூலகம் கொடுக்கின்றது.

குழந்தைகளுக்கு வாசிப்புப் பயிற்சியும் மொழிப் பழக்கமும் கிடைத்துச் சிறந்த மொழியாளுமை உள்ளவர்களாகக் குழந்தைகளை வார்த்தெடுக்க இந்த நூலகம் வழி அமைத்துக் கொடுக்கிறது.

பெரும் ஆளுமைகள் பலர் நூலகத்தில் தங்களைச் செதுக்கிக் கொண்டவர்கள். பெரும் ஆளுமைகள் பலரின் வாழ்க்கை வரலாறு, தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இந்த நூலகத்தின் வழியாக மாணவ, மாணவிகளுக்குக் கிடைக்கிறது. குழந்தைகளுக்கான க்ரியேட்டிவிட்டியை (கற்பனைத் திறம்) வளர்ப்பதற்கும், கற்பனைத் திறத்தைச் சரியான திசையில் மடைமாற்றவும் நூல்கள் துணைபுரிகின்றன. நூலகத்தின் அமைதியான சூழல், புத்தகங்களைப் பொறுப்பாகக் கையாள்வது, உறுப்பினராகச் சேர்ந்து சரியான தேதியில் புத்தகங்களை ஒப்படைப்பது போன்றவை குழந்தைகளிடம் சில ஒழுங்குகளை விருப்பத்துடன் உருவாக்கும்.

குழந்தைகள் நிகழ்ச்சிகளுக்கான அரங்கம், சிறார்களுக்கான திரையரங்கம் போன்ற அரங்குகள் மிகச்சிறப்பாகக் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில் இருக்கின்றன. குழந்தைகளுக்கான கதை சொல்லல் நிகழ்ச்சி கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில் நிகழத் திட்டம் இருக்கிறது என அறிகின்றோம். வரவேற்கத்தக்க முன்னெடுப்பு. கதைகளை வாசிப்பது, வாசித்த கதையை மற்றவர்களுக்குப் புரியும்படி எடுத்துச் சொல்வது ஒரு கலை. அதற்கான ஓர் அரங்கம் என்பது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது.

குழந்தைகளுக்கான பல திட்டங்கள், விடுமுறை காலச் சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்துவதற்குதிட்டம்வகுக்கப்பட்டுள்ளதாக நிருவாகிகள் தெரிவிக்கின்றனர். இப்படிக் குழந்தைகளுக்கான பகுதியைத் தாண்டிச்சென்றால் செய்தி-பத்திரிகைகள் பிரிவு இருக்கிறது.

## நூலகத்தில் இதழியல்:

திராவிட இயக்கத்தின் வளர்ச்சியில், தமிழ்நாட்டில் சமூகநீதி அடிப்படையிலான அனைத்து மக்களுக்குமான வளர்ச்சியில் திராவிட இயக்கப் பத்திரிகைகளின் பங்கு அளப்பரியது.

“திராவிட இயக்கத்தின் முன்னணித் தலைவர்கள் பலர் ஆளுக்கொரு ஏடு நடத்தி, வரலாற்றை உருவாக்கியிருக்கிறார்கள். அவற்றில் வார ஏடுகள், திங்கள் ஏடுகள், திங்களிருமுறை ஏடுகள், நாளேடுகள் உண்டு. பேரறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், கலைஞர் கருணாநிதி, கவிஞர் கண்ணதாசன், என்.வி.நடராசன், கே.ஏ.மதியழகன், இராம. அரங்கண்ணல், ஏ.வி.பி.ஆசைத்தம்பி, சி.பி. சிற்றரசு, வில்லாளன், டி.கே.சீனிவாசன், ஏ.கே. வேலன் - இப்படி முன்னனித் தலைவர்கள் பலர் பத்திரிகையைச் சொந்தத்தில் நடத்தி ஆசிரியர் பொறுப்பையும் ஏற்றிருந்தார்கள்.” (4) என்று குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது. கலைஞர் அரங்கத்தில் "குடி அரசு" தொகுதிகள், "முரசொலி" தொகுதிகள், 'திராவிட நாடு' தொகுதிகள் எனப் பல பத்திரிகைகளின் தொகுப்புகளை நூலாகக் காணமுடிகிறது. பழைய வரலாற்றை நேரடியாக வாசித்து அறிய முடிகிறது.

செய்திப் பிரிவில் பொதுவான தமிழ் நாளிதழ்கள், மாத, மாத இருமுறை, வார, காலாண்டு இதழ்களைக் காண முடிகிறது. சில செறிவான, ஆழமான கட்டுரைகளைத் தாங்கி வரும் பல இதழ்களைக் காணமுடிகிறது. கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகத்தில், காலமெல்லாம் கலைஞரை எதிர்த்த, இன்றைக்கும் திராவிட இயக்கத்தை எதிர்க்கும் இதழ்களும் இந்தச் செய்திப் பிரிவில் இடம் பெற்றிருக்கின்றன. எல்லாரும் தாங்கள் விரும்பும் பத்திரிகைகளை வாசிக்கும் ஒரு பகுதியாகச் செய்திப் பிரிவு இருப்பதைப் பார்க்க முடிகிறது.

## 2ஆம் & 3ஆம் தளம் - நூலகத்தில் தமிழ் & ஆங்கிலம்:

இரண்டாம் தளம் முழுக்கத் தமிழ் நூல்கள், பெரும்பாலான தமிழ் எழுத்தாளர்கள் எழுதியிருக்கும் அனைத்து நூல்களும் இருக்கும் பகுதியாக இருக்கிறது. இன்னும் வகைப்படுத்தி வைக்கும் போது இரண்டாம் தளம் இன்னும் வாசகர்களை ஈர்க்கும்.

மூன்றாம் தளம் முழுக்க ஆங்கில நூல்கள். இன்னும் முழுமையாக அடுக்கி முடிக்கப்படவில்லை. அதிக விலை மதிப்புள்ள ஆங்கில நூல்கள், பல தலைப்புகளில் இந்தத் தளத்தில் இருக்கின்றன.

## 4ஆம் தளம் - நூலகத்தில் தேர்வுகளுக்கான வசதிகள்:

நான்காம் தளம் முழுக்கப் போட்டித் தேர்வுகளுக்கானது. திராவிட இயக்கத்தின் தோற்றமே, பார்ப்பனரல்லாத மக்கள் கல்வி பெற வேண்டும், வேலை வாய்ப்புகளைப் பெறவேண்டும் என்பதுதான். இந்த நூறு ஆண்டு காலத்தில், தமிழ்நாட்டின் பார்ப்பனரல்லாத மக்கள் ஓரளவிற்கு முன்னேறிய போதிலும், இன்னும் போகவேண்டிய தூரம் இருக்கிறது. அந்த வகையில் ஒன்றிய அரசு நடத்தும், மாநில அரசு நடத்தும், வங்கித் தேர்வாணையம் உள்ளிட்ட பல ஆணையங்கள் நடத்தும் தேர்வுக்கான புத்தகங்களால் 4ஆம் தளம் நிரம்பி இருக்கிறது. படித்த பட்டதாரிப் பெண்கள் பலர் இங்கு வந்து படிப்பதும், போட்டித் தேர்வுகளுக்காகப் படிப்பதும், தயார் ஆவதும் கவனிக்கத்தக்க முன்னேற்றமாகும்.

## 5ஆம் தளம் - நூலகத்தில் மின் நூல் வசதிகள்:

இன்றைய உலகம் என்பது மின் நூல் உலகம். நினைத்த நேரத்தில் நினைத்த புத்தகங்களை, வேண்டிய தரவுகளை இணையத்தின் வழியாக பதிவிறக்கிக் கொள்ளும் காலம். இன்னும் செயற்கை நுண்ணறிவு அடிப்படையில் பல வசதிகள் கிடைக்க இருக்கின்றன. எனவே கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகத்தின் 5ஆம் தளம் என்பது மின் நூல், ஒலி நூல், பார்வையற்றவர்களான சிறப்பு நூல்களின் அரங்கமாக இருக்கிறது.

## 6ஆம் தளம் - குறிப்புதவி நூல்கள்:

ஆறாவது தளம் என்பது குறிப்புதவி நூல்கள் மற்றும் நிருவாகப் பிரிவுத் தளமாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

ஆறாம் தளத்தில் நூல் பகுப்பாய்வு, நூல் பட்டியல் தயாரித்தல் மற்றும் நிருவாகப் பணியாளர்கள் சார்ந்த பகுதிகள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு தளத்திலும் குடி நீர் வசதி, மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட அனைவருக்குமான நவீன ஒப்பனை அறைகள் எனப் பன்னாட்டுத் தரத்திலான நூலகமாக இந்தக் கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகம் அமைந்திருக்கிறது.

## நூலகத்தில் அரங்க வசதிகள்:

தரைத்தளத்தில் இரண்டு அரங்கங்கள் இருக்கின்றன. இலக்கியக் கூட்டங்கள் நடத்துவதற்கு ஏதுவாகப் புதுமையாக அமைக்கப்பட்டுள்ள அரங்கங்கள். அதனைப் போல முதல் தளத்தில் குழந்தைகளுக்கான அரங்கம் என இருக்கும் அரங்கங்கள் அடுத்தடுத்து மதுரையில் நடக்க இருக்கும் இலக்கிய விழாக்களை நம் கண் முன் நிறுத்துகின்றன.

“நூலகங்களில் நடைபெறும் புத்தக அறிமுகக் கூட்டங்கள் எளிமையானவை. அய்ம்பது பேருக்குள் தான் வருவார்கள். ஆனால், அக்கறையுடன் பேச்சைக் கவனிப்பார்கள். கேள்வி கேட்பார்கள். மேடை அலங்காரங்கள் கிடையாது. பொன்னாடை போர்த்த மாட்டார்கள். மைக் செட் வசதி கூட இருக்காது. ஆனால், அந்தக் கூட்டம் தரும்

நெருக்கம் பெரிய மேடைகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளில்கூட இருப்பதில்லை.

சிறுநகரங்களில் இலக்கியக் கூட்டங்கள் நடத்தப்படுவது மிகக் குறைவு. அதுவும் திருக்குறள், கம்பராமாயணம், தேவாரம், திருவாசகம் தவிர்த்து வேறு புத்தகங்களைப் பற்றி நிகழ்ச்சிகள் நடைபெறுவது அபூர்வமே.

இந்தக் குறையைப் பொதுநூலகத்தில் நடைபெற்று வந்த வாசகர் வட்ட நிகழ்ச்சிகள் போக்குவதாக அமைந்தன. அதிலும் கிராம நூலகங்களில் கூடப் புத்தக விமர்சனக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. நானே மல்லாங்கிணறு நூலகத்திலும் விருதுநகர் நூலகத்திலும் நிறைய முறை பேசியிருக்கிறேன். புதிதாகப் பேச வருகிறவர்கள் மிகுந்த தயக்கத்துடன் ஒத்துக் கொள்வார்கள். நிறைய புத்தகம் படிப்பவர்களை நூலகரே பேசச் சொல்லிக் கேட்பதுண்டு.”(9) என்று நூலகங்களில் நடைபெறும் வாசகர் கூட்டங்களைப் பற்றி எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணன் குறிப்பிடுவார். இன்றைக்கு அருமையான அரங்கங்கள் கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகத்தில் அமைந்திருக்கின்றன. இதில் சிறப்பாக வாசகர் கூட்டங்கள் நடைபெற முனைப்புக் காட்ட வேண்டும்.

## நூலக நிதி & தொடர்ந்த செயல்பாடு:

தேவையான நிதி ஒதுக்கீடு என்பது கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகத்திற்கு மிக இன்றிமையாதது. தொடர் செயல்பாட்டிற்கான நிதி ஒதுக்கீடுகள் சிறப்பாக அமையவேண்டும். பொதுமக்கள் கொடுக்கும் புத்தகங்களை நன்கொடையாக வாங்குவது, அதனைப் பிரிப்பது, அதனை அந்தந்தப் பகுதியில் சேர்ப்பது, உலகில் புதிது புதிதாக வெளியாகும் புத்தகங்களைத் தொடர்ந்து கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகத்திற்கு வாங்குவது/அனுப்பி வைக்கச் சொல்வது என அனைத்திலும் மக்களின் பங்களிப்பு இருப்பதை உறுதி செய்யலாம். உலகம் முழுவதும் இருக்கும் தமிழர்களை இந்தநூலகத்தின்பணியில்ஏதோஒருவகையில் தன்னார்வலர்களாக ஒருங்கிணைக்கலாம்.

மதுரையில் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி மிகப் பெரிய அறிவுக் கருவூலமாக பெரிய நூலகத்தை அமைத்துள்ளது தமிழ்நாடு (தி.மு.க.) அரசு. எவரும் வியக்கத்தக்க சாதனை அது!

எடுத்துக்காட்டாக உள்ள அந்த அறிவுப் பூங்காவின் அதிகப் பயனை வாசகர்களுக்காக மேலும் பெருக்கும் வண்ணம், உயர்நீதி மன்றங்களில் பல தீர்ப்புகளில் தண்டத் தொகை - அபராதம் விதித்து, அத்தொகையில் இந்த கலைஞர் நூலகத்தில், தனியான சட்ட நூல்கள் பகுதியையே ஏற்படுத்தி, சட்டம் பயில்வோருக்கும், மற்றோருக்கும் பயன்படும் வகையில் சிறந்த ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்தி இருப்பதும் நல்ல முன்மாதிரி எடுத்துக்காட்டாகும்.

எற்றுஎன்று இரங்குவ செய்யற்க -
செய்வானேல்
மற்றுஅன்ன செய்யாமை நன்று (குறள் - 655)

குற்றம் புரிந்தோர் இதன் மூலம் திருந்துவதோடு, அதன் பலன் சமூகத்தின் நலத்திற்கும் - வளத்திற்கும் வாய்க்காலாக ஓடிப் பாய்ந்தால் நல்லது தானே! பாராட்டி மகிழ வேண்டாமா?” (10) என்று திராவிடர் கழகத் தலைவர் வாழ்வியல் சிந்தனைகளில் குறிப்பிட்டிருப்பதைப் போல, எந்தெந்த வகையில் எல்லாம் நிதியைக் கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகத்திற்குச் சேர்க்கலாம் என்பதனைப் பலரும் எண்ணல் வேண்டும். புரவலர்கள் அதிக அளவில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை நூலகத் துறை எடுக்கலாம்.

## நூலகம் எனும் பண்பாட்டு மாற்றம்:

"ஒரு நூலகக் கட்டத்திற்குள் வாழ்நாளில் ஒரு முறை கூடச் செல்லாதவர்கள் தமிழ்நாட்டில் எத்தனை லட்சம் பேர் இருப்பார்கள்? நூலகம் என்ற ஒன்று இருக்கிறது என்பது கூடப் பல பேருக்கு இன்று வரை தெரியாது. அதிசயமாகச் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஒரு நூலகத்திற்குள் மூன்று மணி முதல் நான்கு மணி நேரம் வரை செலவிடுவது, புத்தகங்களைக் கண்குளிரப் பார்ப்பது, எடுத்துப் பார்ப்பது, புத்தகத்தின் அட்டையைத் தடவிப் புரட்டிப் பார்ப்பது, புத்தகங்களின் வாசனையோடு இருப்பது என்பது அதிசயம். அந்த அதிசயத்தைக் கலைஞர் நூற்றாண்டு நூலகம் நிகழ்த்திக்கொண்டிருக்கிறது.

இப்போது நூலகத்திற்குள் நுழைந்திருக்கிறார்கள். நாளை நூலகத்தைப் பயன்படுத்துவார்கள். போட்டித் தேர்வு எழுதுகிறவர்கள் நூலகத்தை வசதியுடன் பயன்படுத்திக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். ஒரு நூலகம் சுற்றுலாத் தலமாக மாறி இருப்பதை முதன்முறையாக உலகம் கண்டிருக்கிறது. அதைக் கலைஞர் நூற்றாண்டு நூலகம் சாதித்திருக்கிறது. நூலகத்தை, புத்தகங்களை வேடிக்கை பார்ப்பதற்காக மக்கள் வருவது முக்கியமான பண்பாட்டு மாற்றம்" (11) என்று எழுத்தாளர் இமையம் குறிப்பிடுவது மிகச் சரியான பார்வையாகத் தோன்றுகிறது.

மதுரையில் இலக்கியங்கள், இதழ்கள், இயக்கங்கள் மற்றும் பல்வேறு ஆராய்ச்சிகளுக்கான மிகப்பெரிய கருவூலமாகக் கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகம் கிடைத்திருக்கிறது. மிக விரைவாக இந்த நூலகத்தைக் கட்டி முடித்து, திறந்து வைத்து, மக்களின் பயன்பாட்டிற்கு அளித்த தமிழ்நாடு அரசுக்கும், அதன் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், ஆய்வாளர்களின் சார்பாகவும், 'திராவிடப் பொழில்' ஆய்விதழின் சார்பாகவும், மனமார்ந்த பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வோம்.

சமூகநீதிப் பயணத்தில் மற்றொரு மைல் கல்லாக இந்த நூலகம் அமைந்திருக்கிறது என்பதில் எவருக்கும் மறுப்பு இருக்க இயலாது.

## அடிக்குறிப்புகள்:


1. அ. திருமலைமுத்துசுவாமி, முதல் பொது நூலக இயக்கம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை,1962., பக்கம் 2

2. கன்னிமாரா பொது நூலகம், விக்கிபீடியா.

3. திராவிட இயக்க வரலாறு தொகுதி-1, முரசொலி மாறன், சூரியன் பதிப்பகம், சென்னை-4, பக்கம் 17-18.

4. https://tamilnadupubliclibraries.org/ta/home

5. மேற்கண்ட இணையதளம்

6. தி இந்து தமிழ், 26.08.2023, எழுத்தாளர் இமையம்

7. பெரியார்பிஞ்சு மாத இதழ், அக்டோபர் 2023, வா. நேரு

8. திராவிட இயக்க இதழ்கள், பேரா. முனைவர். ச. மெய்யப்பன், புலவர் தமிழ்ப்பித்தன் எம்.ஏ., மணிவாசகர் பதிப்பகம், சென்னை-1

9. எஸ். இராமகிருஷ்ணன், இணையதளம்

10. கி. வீரமணி, வாழ்வியல் சிந்தனைகள், விடுதலை நாளிதழ், 12.10.2023

11. தி இந்து தமிழ், 26.08.2023, எழுத்தாளர் இமையம்


## ஆசிரியர் குறிப்பு:


முனைவர். நேரு, தமிழகப் பகுத்தறிவு எழுத்தாளர் மன்றத்தின் மாநிலத் தலைவர்

ஆவார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழிலக்கியத் துறையில், ‘இறையன்பு படைப்புகளில் தன்னம்பிக்கையும் மனித நேயமும்' என்ற தலைப்பில் முனைவர் பட்டம் பெற்றவர். பெரியார் பட்டயச் சான்றிதழும் பெற்றவர். பி.எஸ்.என்.எல் நிறுவனத்தில் அதிகாரியாகப் பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்ற இவர், தமிழ்நாட்டில் மதுரை மாவட்டம் சாப்டூரில் பிறந்தவர். இவர், 'பங்குனி உத்திரமும் பள்ளிக்கூடமும்', 'சூரியக்கீற்றுகள்', ‘சொற்களின் கூடுகளுக்குள்’ எனும் கவிதைத் தொகுப்புகளும், 'நெருப்பினுள் துஞ்சல்' எனும் சிறுகதைத் தொகுப்பையும் எழுதி வெளியிட்டுள்ளார். ‘சங்கப்பலகை’ எனும் நூல் மதிப்புரைகளின் தொகுப்புநூலும் வெளிவந்துள்ளது.

இவரின் ஆய்வேடு, நூலாக்கம் செய்யப்பட்டு, 'இறையன்பு படைப்புகளில் தன்னம்பிக்கையும் மனித நேயமும்' என்னும் நூலாகச் சில நாட்களுக்கு முன் அச்சாக்கப்பட்டு வெளிவந்துள்ளது.

‘திருக்குறள் வலியுறுத்தும் உயிர்ச் சூழலும் இன்றைய உலகச் சூழலும்', 'கடவுளையும் சடங்குகளையும் வள்ளுவம் புறக்கணிக்கிறது', 'தமிழ்த் துறவிகளும் வள்ளுவர் கூறும் தவமும்', 'ஆரிய எதிர்ப்புக்கு முன்னுரை-திருக்குறளின் பாயிரம்', 'செல்வமும் குடிமையும்', 'ஊழும் கூழும் – பகுத்தறிவுப் பார்வை' போன்ற தலைப்புகளில் இவரின் கட்டுரைகள் திருக்குறள் ஆய்வுத் தொகுப்புகளில் வெளிவந்துள்ளன. உலக/ இந்திய மாநாடுகளில் கலந்துகொண்டு ஆய்வுக் கட்டுரைகள் அளித்தவர். பல்வேறு இலக்கிய இதழ்களிலும், சமூக இதழ்களிலும், இணையத்திலும் பரவலாக எழுதி வருபவர்.

*“There is substantial linguistic evidence favoring Dravidian authorship of the Indus Civilization.*

*The evidence includes:*

- *The presence of Dravidian loanwords and loan translations in the Rig Veda.*
- *The substratum influence of Dravidian on Indo-Aryan as seen in phonological changes like introduction of retroflex sounds, morphological changes like switch-over from inflexion to post-fixation, and near-identical syntactical structures moving Indo-Aryan closer to Dravidian than to Indo-European languages.*
- *Computer analysis has shown that the Indus language had only suffixes (as in Dravidian) and no prefixes (as in Indo-Aryan) or infixes (as in Munda).*
- *The Indus religion as revealed by pictorial depiction on seals and sealings included worship of a buffalo-horned male god, mother-goddesses, the pipal tree, the serpent and possibly the phallic symbol, all of which are known to have been derived from the aboriginal populations”.*

*(Interpreting the Indus Script: The Dravidian Solution Convocation Address. Dravidian University – Feb 26 2015, Kuppam. Andhra Pradesh, Union of India).*

## *Prof. Dr. IRAVATHAM MAHADEVAN*

*National Fellow of the Indian Council of Historical Research.*

# பெரியாரின் அறிவியல் தொலைநோக்கு

**பேரா. மு. கசுத்தூரிபாய்,** எம்.எசி., எம்.பில்., டி.ஆர்.டி.,
(யாதவர் கல்லூரி, மதுரை)

**கட்டுரைச் சுருக்கம்:**



*எதிர்காலத்தில் அறிவியல் முன்னேற்றம் எப்படி இருக்கும், அறிவியல் வளர்ச்சி மனிதகுலத்தை எந்த அளவுக்கு மேம்படுத்தும் என்பதையெல்லாம் பகுத்தறிவுப் பகலவன் பெரியார் விளக்கிச் சொல்லி வந்தார். அவருடைய சிந்தனைகளைத் தொகுத்து அறிஞர் அண்ணா தமது 'திராவிட நாடு' இதழில் வெளியிட்டார். பின்னர் அவற்றை 'இனிவரும் உலகம்' என்னும் தலைப்பில் தந்தை பெரியார் தனிநூலாக வெளியிட்டார்.*

*கர்ப்பத் தடை, சோதனைக் குழாய்க் குழந்தை, வானொலிப் பெட்டி, அலைபேசி, காணொளி, மின்சாரத்தின் பயன்பாடு, புதுப்புது வாகனங்கள், வானவூர்திகள், துப்புரவு எந்திரங்கள், வானியல் ஆராய்ச்சிகள், பொருட்களின் இயக்கம் குறித்துப் பெரியார் பேசியவை இன்று நடைமுறைக்கு வந்துவிட்டன. அறிவியல் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்த மதக் கோட்பாடுகள் தகர்ந்துள்ளன.*

*அதே சமயம், மதவாதிகள் விடாப்பிடியாக மூடநம்பிக்கைகளைப் பரப்பி வருகின்றார்கள். அதற்குத் தீர்வும் முடிவும் கூறியுள்ளார் பெரியார். பழைமையை வைத்துக் கொண்டு இலாபம் பார்க்கும் கூட்டம் அறிவியல் பார்வைக்குத் தடை போடுவர்; அவர்களை இனங்கண்டு ஒதுக்கிவிட்டுத் துணிச்சலாக முன்னேறுகின்றவர்களே இனிவரும் உலகத்தின் சிற்பிகளாவர் என்று ஊக்கம் ஊட்டுவதை இக்கட்டுரை ஆய்கின்றது.*

## 1.1 அறிமுகம்:

தந்தை பெரியார் தன்மான இயக்கத்தின் தோற்றுநர் மட்டுமல்ல, பகுத்தறிவு இயக்கத்தின் தோற்றுநரும் வழிகாட்டியும் ஆவார். அவருடைய பேச்சும், எழுத்தும், இதழ்களும், இயக்கமும், செயற்பாடும் பகுத்தறிவுச் சிந்தனைகள் மீது கட்டப்பட்டவை. 1943இல் பெரியார் பேசியவற்றை, அறிஞர் அண்ணா குறிப்பெடுத்துப் பின்னர் பெரியாரிடம் காண்பித்து ஒப்புதல் பெற்றுத் தாம் நடத்தி வந்த **'திராவிடநாடு'** இதழில் 21.01.1943, 28.01.1943 ஆகிய நாட்களில் வெளியிட்டார். அதன் பின்னர், **'இனிவரும் உலகம்'** என்ற பெயரில் அதனைச் சிறு நூலாக வெளிட்டார் பெரியார். அதில், இனிவருங்காலத்தில் அறிவியல் முன்னேற்றங்கள் எவ்வாறு இருக்கும் என்பதையும், அவை எவ்வாறு மனித சமுதாயத்தின் மேம்பாட்டிற்கு உதவும் என்பதையும் கணித்துச் சொல்லியிருக்கின்றார். அன்று அவர் சொன்ன கருத்துகள் பல, இன்று நடைமுறைக்கு வந்துவிட்டன. இப்படி எந்த மதவாதியாவது சொல்லியிருந்தால் அவரைத் **'தீர்க்கதரிசி', 'கடவுள் அருள் பெற்றவர்', 'முக்காலும் உணர்ந்த மகான்'** என்று கொண்டாடியிருப்பர். **'இதுவரை உலகில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்களை அறிவியல் பார்வையோடு அணுகி, அந்த அடிப்படையில் இனி வரப்போகும் மாற்றங்களைப் பகுத்தறிவுவாதியால் மட்டுமே கணிக்க முடியும்'** (இனிவரும் உலகம், ப.3) என்றார் பெரியார்.

## 2.1 கர்ப்பத் தடை:

"இனிவருங்காலத்தில் மக்கள் பிறப்பு கட்டுப்படுத்தப்பட்டு ஓர் அளவுக்குள் கொண்டு வந்து விடக்கூடும்" (மேலது.ப.17)

என்று கணித்தார் பெரியார். மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த அரசு குடும்பக் கட்டுப்பாட்டுப் பரப்புரை தொடங்குவதற்கு முன்னரே, 1930களிலேயே பெரியார் கர்ப்பத் தடையை வலியுறுத்திப் பேசி வந்தார். பெரியாரின் நோக்கம் பெண்களின் நலன் தான்.

01.03.1931 குடிஅரசு இதழில் வெளிவந்த தலையங்கத்தின் சில பகுதிகள்:

*"பெற்றோர்கள் தங்கள் சக்திக்கும் தகுதிக்கும் போதுமான அளவு குழந்தைகளைப் பெற வேண்டும். குழந்தைகள் பெறுவதை அளவோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்".*

*"பிள்ளைப் பேற்றினால் பெண்களுக்கு உடல்நலக்குறைவு ஏற்படுகிறது. பிள்ளைகளை வளர்க்கும் பொறுப்பு பெண்களின் முன்னேற்றத்தைத் தடை செய்கிறது. மேலும் மக்கள்தொகை அதிகரிப்பினால் நாட்டுப் பொருளாதாரமும் பாதிக்கப்படும்".*

*"கர்ப்பத் தடைக்கு மதவாதிகளின் எதிர்ப்பும் அச்சுறுத்தல்களும் இருந்த போதும்* **மேரி ஸ்டோப்ஸ்** *என்ற பெண்மணி துணிந்து செய்த பிரச்சாரத்தால் மேலைநாடுகளில் கர்ப்பத் தடையை ஏற்றுக்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது". (பெரியார் களஞ்சியம், குடிஅரசு, தொகுதி – 12, ப.100).*

அத்தகைய பரப்புரை இந்தியாவிலும் மேற்கொள்ளப் படவேண்டும் என்று பெரியார் விரும்பினார் (1930). பெரியாரின் கருத்தை உள்வாங்கிப் பாவேந்தரும்,

*"காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக்*
*கதவொன்று கண்டறிவோம் இதிலென்ன*
*குற்றம்?"*

என்று கேட்டார். (பாரதிதாசன் கவிதைகள், செந்தமிழ் நிலையம், 24ஆம் பதிப்பு, 1980, ப.124). இதன் முதற் பதிப்பு 1938இல் வெளிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

*"மதுவிலக்குப் பிரச்சாரத்தை விட, தொத்து வியாதிகளை ஒழிக்கும் பிரச்சாரத்தை விட, கர்ப்பத் தடை பிரச்சாரம் முக்கியமானது. கர்ப்பத் தடைக்கென்று ஒரு நிறுவனம் ஏற்படுத்தி அதன் மூலம் பிரச்சாரம் செய்யப் பொதுமக்கள் முன்வர வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்" (குடிஅரசு தலையங்கம், 06.04.1930, பெரியார் களஞ்சியம், குடிஅரசு, தொகுதி – 10, ப.95).* இவ்வாறு குடும்பக் கட்டுப்பாட்டை வலியுறுத்தி அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டார்.

இந்தியாவில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை 1950களில் தொடங்கினாலும் அதற்கென்று ஒரு துறை உருவாக்கப்பட்டது 1966ஆம் ஆண்டில் தான். பெரியார் 1930இல் தெரிவித்த கருத்து 36 ஆண்டுகள் கழித்து நடைமுறைக்கு வந்துள்ளது. பெரியார் எவ்வளவு முன்னோக்கிச் சிந்தித்திருக்கிறார்! இன்று குடும்பக் கட்டுப்பாட்டு விளம்பரங்கள் வந்த நிலை தலைகீழாக மாறிக் கருத்தரிப்பு மைய (Fertility centre) விளம்பரங்கள் பெருகி வருகின்றன. இது பற்றியும் பெரியார் பேசியிருக்கிறார். அது தான் சோதனைக் குழாய்க் குழந்தை (Test tube baby).

## 2.2 சோதனைக் குழாய்க் குழந்தை:

1943ஆம் ஆண்டிலேயே, "ஆண்-பெண் சேர்க்கைக்கும் குழந்தை பெறுவதற்கும் சம்மந்தம் இல்லாமல் போய்விடும்" (இனிவரும் உலகம், ப.17) என்று சொன்னதோடு மட்டுமல்லாமல், அப்புத்தகத்தின் அட்டையில் சோதனைக் குழாய்க்குள் ஒரு குழந்தை இருப்பதைப் போன்ற படத்தையும் போட்டுப் புரட்சி செய்தார் பெரியார். அதற்கும் முன்பு, 1938ஆம் ஆண்டிலேயே இது பற்றிப் பேசியும் உள்ளார். குடி அரசில் காண்க.

1968இல் மருத்துவர்கள் இராபர்ட் எட்வர்ட்சும், பேட்ரிக் ஸ்டெப்டோவும் ஆய்வுகள் மேற்கொண்டு சோதனைக் குழாயில் கருமுட்டையை (zygote) உருவாக்க முடியும் என்பதைச் செய்து காட்டினார்கள். இவர்களுடைய ஆய்வு முடிவுகள் 1969-இல் வெளிவந்தன. இதை அறிந்த பெரியார், "தாம் முன்பு சொன்னது போல ஆண்-பெண் சேர்க்கையின்றிக் குழந்தையை உற்பத்தி செய்ய முடியும் என்பதைச் செய்துகாட்டி விட்டார்களே!" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு முயற்சிகளுக்குப் பின்னர் முதற் சோதனைக் குழாய்க் குழந்தை பிறந்த ஆண்டு 1978. **பேட்ரிக் ஸ்டெப்டோ, இராபர்ட் எட்வர்ட்ஸ்** ஆகியோரின் ஆய்வுகளின்

மூலமாக **இங்கிலாந்தில் முதற் சோதனைக்** குழாய்க் குழந்தை ஜூலை 25, 1978ஆம் ஆண்டு பிறந்தது. இதற்கும் எதிர்ப்புக் குரல் எழுந்தது. ஆனாலும் முயற்சிகள் தொடர்ந்தன. **இந்தியாவில்** முதன்முறையாக அக்டோபர் 3, 1978ஆம் ஆண்டு சோதனைக் குழாய்க் குழந்தை பிறந்தது.

## 2.3 வானொலிப் பெட்டி:

1936ஆம் ஆண்டில் தான் அகில இந்திய வானொலி தனது ஒலிபரப்பைத் தொடங்கியது. நாடு விடுதலை பெற்ற போது, இந்தியாவில் 6 வானொலி நிலையங்களே இருந்தன. இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் 2.5% இடத்திற்கு மட்டுமே ஒலிபரப்பைக் கேட்கும் நிலை இருந்தது. வானொலிப் பெட்டியைக் கண்ணால் கூடப் பல பேர் கண்டிராத காலம் அது. "இனிவரும் காலத்தில் ரேடியோ ஒவ்வொருவர் தொப்பியிலும் அமைக்கப்பட்டிருக்கும்" (இனிவரும் உலகம், ப.16) என்று பெரியார் அப்போதே பேசியிருக்கிறார். மின்கலத்தால் (Battery) இயங்கும் வானொலிப் பெட்டி 1950இல் முதன்முதலில் உருவாக்கப்பட்டு, 1960இல் சோனிக் குழுமம் அதனைப் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தது. Transistor எனப்படும் கையடக்க வானொலிப் பெட்டியைப் பற்றி யாருமே நினைத்துக் கூடப் பார்த்திராத காலத்தில் பெரியார் அதைப் பற்றிச் சிந்தித்திருக்கிறார்; சொல்லியிருக்கிறார்; எழுதியிருக்கிறார். அதுதான் அவருடைய ஆற்றல் வாய்ந்த தொலைநோக்கு; அறிவியற் பார்வை.

## 2.4 அலைபேசியும் காணொளியும்:

உலகமே உள்ளங்கையில் என்று சொல்லத்தக்க வகையில் தகவல் பரிமாற்றம் வளர்ந்திருக்கிறது. தொழில்நுட்பங்கள் பெருகி வருகின்றன. இன்றைக்கு எல்லோர் கையிலும் அலைபேசி (Cell Phone) இருக்கிறது. திறன்பேசி (Smart Phone) மூலம் உலகத்தில் எந்த மூலையில் என்ன நடந்தாலும், உடனுக்குடன் நாம் இருக்கும் இடத்திலிருந்து கொண்டே அறிந்து கொள்ள முடிகிறது. புலனத்தில் (WhatsApp) காணொளி அழைப்பின் (Video Call) வழியாக நேருக்கு நேர் முகம் பார்த்து உரையாட முடிகிறது.

முதல் அலைபேசி ஜப்பானில் 1979ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. 1983இல் தான் பரவலாகப் பலரும் பயன்படுத்தத்தக்க வகையில் அலைபேசி புழக்கத்திற்கு வந்தது. இந்தியாவிற்குள் அலைபேசி நுழைந்த ஆண்டு 1995. ஒளிப்படக் கருவியுடன் கூடிய அலைபேசி (Camera Phone) இந்தியாவிற்கு வந்த ஆண்டு 2000. அலைபேசி வரலாறு இவ்வாறு இருந்த போதிலும், 1980-ஆம் ஆண்டில் கூட, நம் நாட்டில் ரூ.1000 முன்பணம் செலுத்தி விட்டுத் தரைவழித் தொலைபேசி இணைப்பிற்காகப் பல மாதங்கள் காத்திருக்கும் நிலை இருந்தது. ஆனால் 1943ஆம் ஆண்டிலேயே பெரியார் இன்றுள்ள அலைபேசி வசதி பற்றிச் சொல்லியிருப்பதைப் படிக்கும்போது வியப்பு தோன்றுகிறது.

"உருவத்தைத் தந்தியில் அனுப்பும் படியான சாதனம் எங்கும் மலிந்து ஆளுக்கு ஆள் உருவம் காட்டிப் பேசிக் கொள்ளத் தக்க சவுகரியம் ஏற்படும்" (இனிவரும் உலகம், ப.16).

"ஓரிடத்தில் இருந்து கொண்டே பல இடங்களில் மக்களுக்குக் கல்வி கற்றுக் கொடுக்கச் சாத்தியமாகும்" (மேலது).

இப்படி, சென்ற நூற்றாண்டில் பெரியார் சொன்னது இந்த நூற்றாண்டில் நடைமுறைக்கு வந்துள்ளது. பெருந்தொற்றுக் (Corona) காலத்தில் கிராமப்புற மாணவர்கள் கூட வீட்டிலிருந்தபடியே இயங்கலை (Online) வகுப்புகள் மூலம் கல்வி கற்கும் வசதி கிடைத்தது. இணையப் பல்கலைக்கழகங்கள் மூலம் இயங்கலை வகுப்புகள் நடைபெறுகின்றன. இங்கிருந்து கொண்டே வெளிநாட்டுப் பல்கலைக்கழகக் கல்வியைப் பெறமுடிகிறது. காணொளி வாயிலாகப் பன்னாட்டுக் கருத்தரங்கங்கள் நடைபெறுகின்றன.

## 2.5 வாழ்க்கை வசதிகள்:

"வாழ்க்கையில் இன்பம் அனுபவிக்கப் பயன்படும்படியான அதிசயப் பொருட்களும் கண்டுபிடிப்புகளும் தனிப்பட்டவர்கள்

இலாபத்துக்காக என்று முடங்கிக் கிடக்காமல் சகல மக்களுக்கும் சவுகரியம் தருகிற சாதனமாக அமையும்'' (இனிவரும் உலகம், ப.18).

''மின்சாரத்தின் உபயோகம் மக்களுக்குப் பயன்படக் கூடிய விதமாகவும் மக்கள் வசதிகளுக்குத் துணை செய்யும் விதமாகவும் விரியும்'' (மேலது, ப.17).

இப்படிப் பெரியார் பேசிய காலத்தில் மின்விசிறி கூட இல்லாமல் பங்கா இழுத்துக் கொண்டிருந்த காலம். இன்றைக்கு எல்லா வேலைகளுக்கும் மின்சாரமும் மின்சாதனங்களும் துணை புரிகின்றன. வேலைப் பளுவைப் பெரிதும் குறைத்துள்ளன என்பதை விளக்கத் தேவையில்லை.

''மனிதன் பாரம் எடுக்க வேண்டியதோ இழுக்க வேண்டியதோ இருக்காது'' (மேலது, ப.13) என்று பேசியிருக்கிறார். பொருட்களைத் தலையில் சுமந்து சென்றதும் உண்டு. மாட்டுவண்டியிலும் கைவண்டியிலும் பொருட்களை மட்டுமல்லாது மனிதர்களையும் ஏற்றிச் செல்லும் நிலை இருந்தது. துன்பப்படும் மனிதனைக் கண்டு இரக்கம் கொண்டு பெரியார் இக்கருத்தைச் சொல்லியிருக்கலாம். அவருடைய இயல்பான மனிதநேயத்தின் ஒரு கூறாக இதனைக் கொள்ளலாம். மனிதர்களுடைய துன்பங்களுக்கு, அறிவியல் தீர்வு காணும் என்று பெரியார் நம்பினார் என்பதையே இது காட்டுகிறது. மனிதனை வைத்து மனிதனே இழுத்துச் செல்லும் நிலை கலைஞர் ஆட்சியில் தான் முடிவுக்கு வந்தது. பெரியார் காலத்திலேயே அவர் எதிர்பார்த்தது நடந்தது. மனிதர்களையும் பொருட்களையும் ஏற்றிச் செல்ல மிதிபொறிகள் வந்தன. தற்சமயம் எரிபொருளில் இயங்கும் தானிகளையும், சுமை உந்துகளையும் எங்கும் காணலாம்.

''ஆகாய விமானமும் அதிவேக வாகனமுமாகவே இருக்கும். ஒரு டன் உள்ள மோட்டார் கார் ஒரு அந்தர் வெயிட்டுக்கு வரலாம். பெட்ரோலுக்குப் பதில் மின்சக்தியே பயன்படுத்தப்படலாம்'' (மேலது, ப.17). பெரியார் சொன்னது போலவே அதிவேகப் போக்குவரத்து வாகனங்களில் பயணம் செய்து கொண்டிருக்கிறோம். கார்களின் எடையும் குறைந்துள்ளது. பெரியார் பேசி 75 ஆண்டுகளுக்குப் பின்னால் மின்சாரத்தில் இயங்கும் ஊர்திகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. பெரியார் அத்துறையில் நிகழ்ந்த முன்னேற்றங்களைக் கூர்ந்து கவனித்துத் தான் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய மாற்றங்களைப் பற்றிப் பேசியிருக்கிறார் என்பதை 1949-இல் அவர் ஆற்றிய உரையின் மூலம் அறியலாம்:

''ஒரு சாதாரணமான மோட்டார் வண்டி கூட, சென்ற சில வருடங்களில் எவ்வளவோ மாற்றம் அடைந்திருக்கிறதே! 1917இல் இருந்த மோட்டார் வண்டி போல 1930இல் இல்லை. 1947ஆம் வருடத்திய மோட்டார் வண்டி 1946ஆம் ஆண்டு வண்டி போல இல்லை. ஏன்! 1947ஆம் ஆண்டு முடிவில் வரும் வண்டி, அந்த ஆண்டுத் தொடக்கத்தில் வந்த வண்டியிலிருந்து கொஞ்சமாவது மாறுபட்டிருக்கிறது. அந்த இயந்திரச் சாலை நிபுணர்கள் தொடர்ந்து அதில் கவலை எடுத்துக் கொண்டு வேலை செய்து வருவதால் தான் இத்தகைய முன்னேற்றத்தைக் காண முடிகிறது, முதலில் 5 வருடத்திற்கு ஒரு முறை மாடல் (அமைப்பு) மாறிக் கொண்டே வந்தது. இன்று ஒரு வருடத்திற்குள்ளாகவே இரண்டு முறை மாறும் நிலைக்கு வந்துவிட்டதே! இப்படித் தான் பலவற்றிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அப்படி மாறுவது தான் இயற்கை''. (திருவத்திபுரத்தில் சொற்பொழிவு 19.01.1948, விடுதலை நாளிதழில் 29.02.1949 வெளிவந்தது, பெரியார் இன்றும் என்றும், ப.503).

## 2.6 துப்புரவுத் தொழிலில் இயந்திரங்கள்:

''இழிவான வேலையென்று வருங்காலத்தில் ஒன்று இருக்க முடியாது. கக்கூசு எடுக்க, வீதி கூட்ட இயந்திரங்கள் வந்து விடும்'' (இனிவரும் உலகம், ப.13). பிற நாடுகளில்துப்புரவுப்பணியில்இயந்திரங்களே பயன்படுத்தப்படுவதால் அத்தொழிலை யாரும் இழிவானதாகக் கருதுவதில்லை. மற்ற வேலைகளைப் போலவே எல்லாத் தரப்பு மக்களும் இத்தொழிலில் ஈடுபடுகின்றனர். ஆக, பெரியார் சொன்னது பிற நாடுகளில்

நடைபெறுகின்றது. ஆனால், இந்தியாவிலோ துப்புரவுத் தொழில் சாதியத் தொழிலாகவும் தீண்டாமையின் வடிவமாகவும் பார்க்கப்படுகிறது. துப்புரவுத் தொழிலை மேம்படுத்த, எளிமையானதாக்கப் போதுமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றும் இழிநிலையும், அவ்வப்போது உயிரிழப்புகளும் தொடர்கதையாகத் தான் இருக்கின்றன. இதற்கெதிரான குரல் இப்போது தான் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. பிறப்பிலும் தொழிலிலும் உயர்வு தாழ்வு இல்லை என்று பெரியார் அன்று சொன்னது இனியாவது நடைமுறைக்கு வர வேண்டும் என்று தொடர்ந்து குரல் கொடுப்போம். அவர் காண விரும்பிய மாற்றம் நிகழும் என்று நம்புவோம்.

## 3.0 பகுத்தறிவே அடிப்படை:

''இது வரை உலகில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்களை அறிவியல் பார்வையோடு அணுகி, அந்த அடிப்படையில் இனி வரப்போகும் மாற்றங்களைப் பகுத்தறிவுவாதியால் மட்டுமே கணிக்கமுடியும்'' (மேலது, ப.3) என்ற பெரியார் கூற்றுக்குப் பெரியாரே சான்று.

கர்ப்பத் தடை, சோதனைக் குழாய்க் குழந்தை, வானொலிப் பெட்டி, அலைபேசி, காணொளி வசதி, மின்சாரப் பயன்பாடு பற்றிப் பெரியார் 1943இல் கூறியவை இன்று நடைமுறைக்கு வந்திருப்பதை அறிகிறோம்.

''இந்தப் பகுத்தறிவு, சிந்தனை வளர்ச்சி எங்கே கொண்டு போய் விடுமோ சொல்லவே முடியாது. 20 ஆண்டுகட்கு முன்பு நான் விளையாட்டு போலச் சொல்லி உள்ளேன். அதை 'இனிவரும் உலகம்' என்ற புத்தகத்தைப் பார்த்தால் தெரியும். அதிலே பலவற்றைச் சொல்லி இருக்கிறேன். அவைகளில் பாதிக்கு மேல் இன்று நடைமுறைக்கு வந்துவிட்டன'' (விடுதலை, 16.11.1971 – மானாமதுரை, சிவகங்கை, தேவகோட்டையில் 9,10,11 நவம்பர் 1971 சொற்பொழிவுகள், பெரியார் இன்றும் என்றும், ப. 282) என்று பெரியாரே பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார். இவற்றையெல்லாம் அவர் ஏதோ போகிற போக்கில் பேசவில்லை. பெரியார் பேசியவையெல்லாம் அறிவியற் பார்வை கொண்ட தொலைநோக்கு. பகுத்தறிவுவாதியான பெரியார், உலக அளவில் அறிவியலில் ஏற்படுகின்ற முன்னேற்றங்களைக்கூர்ந்துகவனித்து, அடுத்து வரப்போகிறமாற்றங்களைக்கணித்திருக்கிறார் என்பதை அவருடைய உரைகளிலிருந்து அறிய முடிகின்றது. ''பகுத்தறிவு, மனிதனை உன்னத அறிவினைப் பெறச் செய்யும். அதிசய அற்புதங்களையெல்லாம் கண்டுபிடிக்கச்செய்து மனிதச் சமுதாயத்தின் தொல்லைகளை, குறைபாடுகளைப் போக்க உதவும்'' (மேலது) என்பதில் பெரியாருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது.

## 4.0 அறிவியல் வரலாறு பற்றிய பார்வை:

ஒரு காலத்தில் அய்ரோப்பாவில் ஆட்சி அதிகாரம் மதவாதிகளின் கையில் இருந்தது. **கலிலியோ, கோபர்நிகசு, புரூனோ** போன்ற அறிவியல் அறிஞர்கள் பலர் சித்தரவதைகளுக்கு ஆட்பட்டனர். அறிவியல் ஆய்வுகள் நெருக்கடிக்கு உள்ளாயின. பின்னர் மதவாதிகளின் பிடி தளர்ந்த காரணத்தினால், அறிவியல் மறுமலர்ச்சி (Renaissance) ஏற்பட்டது. இவை அனைத்தையும் 1949ஆம் ஆண்டிலேயே பெரியார் மிகத் தெளிவாக மக்களுக்குப் புரியும்படியாகச் சொல்லிவிட்டார்.

''சூரிய மண்டல உண்மைகளை முதன்முதலில் வெளியிட்ட கோபர்நிகசைத் தூற்றினார்கள். இப்பொழுதோ பூமி சூரியனைச் சுற்றி வருகிறதென்று எல்லா மக்களும் நம்புகிறார்கள். கோபர்நிகசுக்கு முன்பு வரை, சூரியன்பூமியைச்சுற்றிவருவதாக நம்பி வந்தார்கள். முன்பு நிந்திக்கப்பட்ட கோபர்நிகசு இன்று போற்றப்படுகிறார். ஒவ்வொரு நட்சத்திரமும் உண்மையில் சூரியனுக்கு ஒப்பானது என்று முதன்முதலில் கூறிய புரூனோ தீக்கிரையாக்கப்பட்டார். வானசாத்திர உண்மைகளை வெளியிட்டுப் பாதிரிகளின் குருட்டு நம்பிக்கைகளை ஒழித்த கலிலியோ சித்ரவதை செய்யப்பட்டார். இப்பொழுது அதே கிறித்துவர்கள் கலிலியோ கூறியவை எல்லாம் உண்மை என்று ஒப்புக்கொள்கிறார்கள்''.

''டார்வின் கொள்கைகளை நாத்திகக் கொள்கை, மூடக் கொள்கை என்று வெறுத்தவர்கள் இப்போது அவரது பரிணாமக் கொள்கைகளை ஒப்புக் கொள்கிறார்கள்'' (குடிஅரசு, 23.07.1949, பெரியார் இன்றும் என்றும், ப.367).

''அது போலவே நம் நாட்டில் நிலவி வந்த கிரகணம் பற்றிய நம்பிக்கை தவறானது. அது வானியல் தெரியாத காலத்தில் ஏற்பட்ட மூடநம்பிக்கை என்றும் இப்பொழுது வானியல் அறிந்தவர்கள் பூமி - சூரியன் ஆகியவற்றின் இயக்கம், கால அளவு ஆகியவற்றைக் கண்டுபிடித்த பின் சூரியனைப் பாம்பு கவ்வுவதில்லை என்பதைப் புரிந்துகொண்டார்கள்'' (பெரியார் களஞ்சியம், குடிஅரசு, தொகுதி – 41, ப.90) என்று பெரியார் பேசினார்.

''இவ்வாறு காலம் செல்லச் செல்ல அறிவியல் உண்மைகளைக் கடவுள் நம்பிக்கையாளர்களும் ஆத்திகர்களும் வைதிகர்களும் ஒப்புக்கொண்டு வருகிறார்கள்'' என்றார் பெரியார்.

''அறிவு வளர்ச்சியும் ஆராய்ச்சியும் முதிரமுதிர பழைய மத நம்பிக்கைகள் மறைந்துவிடும்'' (பெரியார் களஞ்சியம் - குடிஅரசு தொகுதி -41, ப.91) என்று பெரியார் நம்பினார். ஆனால், இன்னும் பழைய மூடநம்பிக்கைகளைப் பலர் பிடித்துத் தொங்கிக் கொண்டுள்ளனர். ஆனால் இந்த நிலையும் மாறும்.

## 4.1 பெரியாரின் அறிவியல் ஆர்வம்:

பொதுவாக, படித்த அறிஞர்கள் பலர், தாம் சார்ந்த துறையில் வல்லுநர்களாக இருப்பர்; ஆனால் பிற துறை பற்றி ஆர்வம் காட்டாதவர்களாக இருப்பார்கள். எடுத்துக்காட்டாக, கலை இலக்கியத்தில் கரை கண்டவர்கள், அறிவியல் செய்திகளில் ஆர்வம் காட்டமாட்டார்கள். பொறியியல் வல்லுநர்கள், உயிரியல் பற்றி அறிந்து கொள்ள முனைப்பு காட்ட மாட்டார்கள். அறிவியலாளர்க்கு இலக்கியம், வரலாறு தேவை இல்லை என்ற எண்ணம் உள்ளது. அது தவறு. பல்துறை சார்ந்த அறிவு எல்லோருக்கும் தேவை. சமூக சீர்திருத்தவாதியான பெரியார் அறிவியல் கருத்துகளைக் கூர்ந்து படித்திருக்கிறார் என்பதற்கு ஒரு சான்று: விழும் பொருட்களின் இயக்கவியல் விதி (Law of falling objects) பற்றிப் பெரியார் எழுதியிருக்கிறார்:

''பளுவான பொருட்கள் இலேசான பொருட்களை விட விரைவாக விழுமென இரண்டாயிரம் ஆண்டு காலம் தடையின்றி நம்பப்பட்டு வந்தது. அதற்கு அரிசுடாட்டிலை மேற்கோளாகக் காட்டினர். உண்மை வேறு விதமானதென்று கலிலியோ நிரூபித்துக் காட்டும் வரை மக்கள் அவ்வாறே நம்பி வந்தனர். ஆராய்ந்து பாராமல் கண்மூடித்தனமாக நம்பப்படுபவைகள் எல்லாம் உண்மையாகி விடமாட்டா. அத்தகைய தவறான நம்பிக்கைகளை உடைத்தெறிவதிலேயே அறிவு வளர்ச்சி அடைகிறது''. (பகுத்தறிவு மலர் 2, இதழ் 5 கட்டுரை 1936, பெரியார் இன்றும் என்றும், ப.420). அந்தக் காலகட்டத்தில் எவ்வளவு மக்கள் படிப்பறிவு பெற்றிருந்திருப்பர்! படிக்காத பாமரர்க்கும் புரியும் வகையில் அறிவியல் வளர்ச்சி பற்றிப் பேசியிருக்கிறார். அவர் தம்மைத் தாமே வளர்த்துக் கொண்டது மட்டுமல்லாமல் தம் மக்களும் அறிவு பெறவேண்டும் என்பதில் எவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டார் என்று புரிகிறது. ''மானமும் அறிவும் மனிதர்க்கழகு'' என்று சொன்னவரல்லவா பெரியார்!

கிண்டி பொறியியல் கல்லூரியில் முதன்முதலாகக் கணினி செயல்பாட்டுக்கு வந்த போது, தள்ளாத வயதிலும் சக்கர நாற்காலியில் சென்று கணினி பற்றி கேட்டுத் தெரிந்து கொண்டார் என்ற செய்தியிலிருந்து பெரியாரின் அறிவியல் ஆர்வத்தைப் புரிந்து கொள்ளலாம்.

## 5.0 பெரியார் பார்வையில் மதமும் அறிவியலும்:

''புராண இதிகாசச் சேற்றில் விழுந்த பண்டிதர்களுக்கு, மனிதருக்கு இயற்கையாகவே இருக்கக் கூடிய பகுத்தறிவைப் பாழ்படுத்தும் மூடநம்பிக்கை பற்றிக் கொண்டிருக்கின்றது. மதவாதிகள் பகுத்தறிவுக்கு ஒவ்வாத புராணங்களை நம்பிக் கொண்டு அவை உண்மையாக நடந்தவை

போல பேசுவார்கள்'' (இனிவரும் உலகம், ப.3) என்று பெரியார் பேசியது இன்றளவும் உண்மையாகத் தான் இருக்கிறது. மேலும் இந்தியாவில் ஆட்சி அதிகாரம் இத்தகைய மதவாதிகளின் கையில் சிக்கியுள்ளதால் அறிவியல் திணறுகிறது. அறிவியல் அறிஞர்கள் சிலரும் மதப் பிடியில் சிக்கிக் கொண்டு சிந்திக்கும் ஆற்றலை இழந்து வருகின்றனர். எதிர்க்கும் அறிஞர்கள் தண்டிக்கப்படுகின்றனர்; கொலை செய்யப் படுகின்றனர்.

## சில சான்றுகள்:

1. 'மாட்டு மூத்திரம் புற்றுநோயைக் குணப்படுத்தும்' – பிரக்யா தாகூர்

2. 'பசுமாடு ஆக்சிஜனை வெளியிடுகிறது, அதன் மூலம் ஆஸ்துமாவும் காசநோயும் குணமாகும்' – வாசுதேவ் தேவநானி.

3. 'சமஸ்கிருதம் பேசினால் சர்க்கரை நோய் குணமாகும்' – கணேஷ்சிங்.

4. 'சமஸ்கிருத சுலோகம் சொன்னால் கொரோனா நீங்கும்'

5. 'மாட்டுச் சாணமும் மூத்திரமும் நோய்களுக்கு மருந்து'

இவை போன்ற கூற்றுக்கள் இன்றைய மருத்துவ அறிவியலுக்கு சவாலானவை. மக்கள் உயிருக்கு ஆபத்தானவை. அறிவியலுக்குத் தடையானவை.

அறிவியலையும் மத புராண, இதிகாசக் கருத்துகளையும் கலந்து போலி அறிவியல் (Pseudoscience) கருத்துகளை மக்களிடம் கொண்டு செல்லும் பணிகளை ஒன்றிய அரசு செய்துகொண்டு வருகிறது. இந்திய தேசிய அறிவியல் கழக மாநாட்டில் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி, பிள்ளையாரைச் சான்றுகாட்டி அந்தக் காலத்திலேயே ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சையும் (Plastic Surgery) உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையும் (Organ Transplantation) நடந்துள்ளன என்று பேசியுள்ளார். அந்த விஞ்ஞானப் புத்தகம் எங்கே? என்பது தான் நம் கேள்வி.

இந்திய அறிவியலாளர் மாநாட்டில் ஆந்திரப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் நாகேஸ்வரராவ் அறிவியலுக்குப் புறம்பான கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்:

''டார்வின் கோட்பாட்டை விட விஷ்ணுவின் தசாவதாரமே மேலானது; மகாபாரதத்தில் 100 குழந்தைகள் பிறப்பு – சோதனைக் குழாய்க் குழந்தை பிறப்பிற்குச் சான்று; அந்தக் காலத்திலேயே குருத்தணு (Stem Cell) பயன்பாடு இருந்திருக்கிறது; 100 குழந்தைகள் பெறுகின்ற அளவுக்குப் பண்டைய இந்தியாவில் மிகச் சிறந்த மகப்பேறு மருத்துவ நுட்பங்கள் (Advanced Reproductive Technologies) இருந்தன''.

ஒரு துணைவேந்தரே இவ்வாறு பேசி, அறிவியல் அறிஞர்களை முகம் சுழிக்க வைத்தார். அறிவியல் பார்வை கொண்ட அறிஞர்கள் கூட்டமைப்பு இத்தகைய கருத்துகளுக்குக் கண்டனம் தெரிவித்திருக்கிறது. ஆனாலும் இது தொடர்கிறது. பெரியார் இனி வருங்காலத்தில் அறிவியல் முன்னேற்றம் எவ்வாறு இருக்கும் என்று சிந்தித்துப் பார்த்தார். ஆனால் மத நம்பிக்கையாளர்கள் அறிவியலைப் புராணங்களில் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஏன்? ஏதற்கு? எப்படி? என்று கேட்பது அறிவியல் மனப்பான்மை (Scientific Temper). கேள்வியே கேட்கக் கூடாது என்பது மதம். அறிவியல் மனப்பான்மையை வளர்க்க வேண்டிய கல்வியைப் பாடத்திட்டங்களில் சேர்க்காமல், அதற்கு மாறாக பிற்போக்குத்தனமான கருத்துகளைத் திணித்து வருகிறார்கள். இராமாயணமும் மகாபாரதமும் மத்தியப்பிரதேசப் பொறியியல் கல்லூரிப் பாடத்திட்டத்தில் இடம்பெற்றுள்ளன. அறிவியலுக்குச் சற்றும் பொருந்தாத சோதிடத்தைப் பாடமாக்கியுள்ளனர். 2017இல் கல்வி அமைச்சர் ஹர்ஷவர்தன், இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தில் (Indian Institute of Technology) பஞ்சகவ்யம் பற்றிய ஆய்வுகளுக்குத் தாராளமாக நிதி ஒதுக்கியுள்ளார். ஆனால் அறிவியல் உலகம் ஏற்றுக்கொண்ட டார்வின் படிநிலைக் கொள்கை (Darwin's Theory of Evolution) பாடத்திட்டத்திலிருந்து நீக்கப்படவேண்டும் என்று 2017இல் ஹர்ஷவர்தன் பேசியுள்ளார். இந்த ஆண்டு, 10ஆம் வகுப்பு பாடநூலிலிருந்த

டார்வின் கொள்கை நீக்கப்பட்டு விட்டது. இதனைக் கண்டித்து 1800 அறிவியல் அறிஞர்கள், ஆசிரியர்கள் கையொப்பமிட்டுக் கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளனர் என்பது அறிவியல் பார்வை உடையவர்களுக்கு ஆறுதல் தரும் செய்தியாகும்.

இதைத்தான் பெரியார், ''கல்வியும் மதமும் கலந்தால் அறிவு சூன்யமாக வேண்டியதே தவிர வேறில்லை'' என்று கூறினார். ''அறிவு வேறு, மதம் வேறு என்று பிரித்துவிட வேண்டும். மதத்தைப் புகுத்தி அறிவை வளரவிடாமல் செய்துவிட்டால் சுதந்திர ஞானம் எப்படி ஏற்படும்? '' (1931 சொற்பொழிவு, பெரியார் இன்றும் என்றும், ப.561) என்று கேட்டார் பெரியார்.

அறிவியல் கருவிகளைக் கொண்டு அறிவை வளர்ப்பதற்குப் பதிலாக சோதிடம், கிரகப் பெயர்ச்சி, ராசி பலன்கள், அதற்கான பரிகாரங்கள், மந்திரங்கள், தாயத்து எனத் தொடர்ந்து ஒளிபரப்பி மக்களைச் சிந்திக்க விடாமல் செய்கிறார்கள். சந்திரயான் 3 வெற்றியைக் கொண்டாடும் போதே, சிவன் தலையில் சந்திரன் என்ற கதையைப் புறந்தள்ள வேண்டுமல்லவா? மாறாக நிலவில் சந்திரயான் இறங்கிய இடத்திற்குச் 'சிவசக்தி' என்று பெயர்சூட்டி மதச் சாயம் பூசியுள்ளதை அறிவியல் அறிஞர்கள் பலரும் கண்டித்துள்ளனர். முன்பே சந்திரனில் அடியெடுத்து வைத்த அமெரிக்காவும் ரஷ்யாவும் கூட, தங்கள் மத அடையாளத்தை அங்கு பதிக்கவில்லை.

## 6.0 நிறைவாக...

பெரியார் சொன்ன தீர்வு இதுவே:

“பழைய முறைப்படி உள்ள அமைப்புகளால் இலாபமடையும் கூட்டம் புதிய அமைப்பு ஏற்படுவதைத் தடுக்க முயற்சிப்பது இயற்கை. அவர்களைக் கண்டு கலங்காமல் வேலை செய்வோரே இனிவரும் உலகத்தின் சிற்பிகளாக முடியும்'' (இனிவரும் உலகம், ப.28).

## பார்வை நூல்கள்:

1. பெரியார், இனிவரும் உலகம், பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை – 600 007, பதிமூன்றாம் பதிப்பு, அக்டோபர் 1997.

2. பெரியார் களஞ்சியம், குடி அரசு தொகுதி – 10, பதிப்பாசிரியர் கி. வீரமணி, டி.லிட்., பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை – 600 007, 2010.

3. பெரியார் களஞ்சியம், குடிஅரசு தொகுதி – 12, பதிப்பாசிரியர் கி. வீரமணி, டி.லிட்., பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை – 600 007, 2010.

4. பெரியார் களஞ்சியம், குடிஅரசு தொகுதி – 41, பதிப்பாசிரியர் கி. வீரமணி, டி.லிட்., பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை – 600 007, 2012.

5. பெரியார் இன்றும் என்றும் (பெரியாரின் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள்), விடியல் பதிப்பகம், கோயம்புத்தூர் - 641 015, ஆறாம்பதிப்பு, 2018.

## ஆசிரியர் குறிப்பு:

பேரா. மு. கசுத்தூரிபாய், மதுரை யாதவர் கல்லூரியல் பயிரியல் துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் பணியாற்றியவர். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் பகுத்தறிவுச் சிந்தனைச் சான்றிதழும் (Certificate in Rationalistic Thought), பட்டயமும் (Diploma) பெற்றவர். யாதவர் கல்லூரியில் பகுத்தறிவுச் சிந்தனை வகுப்புகளை நடத்தியவர்.

இவரும் பேரா. இ.கி. இராமசாமியும் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்ட இணையராவர். திராவிட இயக்கம், தனித்தமிழ் இயக்கம் ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். பகுத்தறிவாளர் கழக மாநாடுகளிலும், பொதுக்கூட்டங்களிலும், வானொலியிலும் உரைவீச்சு நிகழ்த்தியவர். பெண்ணுரிமைச் சிந்தனையாளர்; அறிவியற் பார்வையோடு எந்தக் கருத்தையும் அணுகுபவர்; வாசகர்; திறனாய்வாளர்; கட்டுரையாளர். அண்மையில் (மே. 2023) அறிவியற் பார்வையில் சங்க இலக்கியச் செய்திகள் என்ற நூலை இயற்றி வெளியிட்டுள்ளார்.

❍ ***Names of the Nation - A Comparative Study***
***Prof. Kannabiran Ravishankar***

*This paper examines both the names - India & Bharat, and enquires from multiple epistemic segments. The word 'India' is NOT foreign-born as many presume, rather it's merely an exonym of the native endonym. The same can be said of the word 'Bharatam' which is a derivation from Iranian roots.This paper establishes the root-word of 'Bharat' as Agni (Fire), dwells upon the Rig-Vedic 'Bharata Tribes' and their migration from the North West to Eastern Gangetic Plains. Also, it verifies whether the word 'Bharat' is derived from Hindu or Jain sources. From the Hathigumpha Inscriptions, this paper records that 'Bharat Varsha' only denoted North India and South India was excluded at that point of time in history. Finally, italso touches upon the Constituent Assembly debate on Article 1 ("India, that is Bharat") of the Indian Constitution, the eventual Vote, and Dr. Ambedkar's wisdom on this issue.*

❍ **சுயமரியாதை இயக்கம் முன்வைத்த சுயமரியாதைத் திருமணங்கள்**
**முனைவர். ச. ஜீவானந்தம்**

திருமணம் என்பது பெண்ணும் ஆணும் சேர்ந்து வாழ்க்கையை நடத்த ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தம் என்றும், அந்த ஒப்பந்தம் பெண்ணையும் ஆணையும் மட்டும் சார்ந்ததே ஒழிய, வேறு எவ்விதத் தெய்வீகத் தன்மைக்கும் சம்பந்தப்பட்டது அல்ல என்ற சுயமரியாதைத் திருமணக் கோட்பாட்டை இக்கட்டுரை ஆய்கிறது.

❍ **செக்கார் வணிகச் சமூகம்-ஒரு வரலாற்றுப் பார்வை**
**முனைவர். நாக.கணேசன்**

இக்கட்டுரை, பண்டைய செக்குத் தொழிலையும், எண்ணெய் உற்பத்தியையும், எண்ணெய் வணிகம் செய்த மக்களின் பண்டைய வாழ்வியலையும் ஆராய்கிறது. செக்குத் தொழிற்பட்ட செக்கார் சாதியின் பல்வேறு படிநிலைகளைக் கல்வெட்டுகளின் வாயிலாகவும் இலக்கியங்களின் வாயிலாகவும் ஆராய்ந்து, அவர்களிடையே நிலவிய மூடநம்பிக்கைகளையும், சமூக ஏற்றத்தாழ்வுகளையும் படம் பிடித்துக் காட்டுகிறது.

❍ **கலைஞர் நூற்றாண்டு நூலகம் சமூகநீதிப் பார்வையில் ஓர் அறிமுகம்**
**முனைவர். வா. நேரு**

மதுரையில் அண்மையில் நிறுவப்பட்டுள்ள கலைஞர் நூற்றூண்டு நூலகம் பற்றிய அறிமுகத்தை வழங்கும் இக்கட்டுரை, சமூகத்தில் பொதுநூலகம் என்னும் அமைப்பு, எவ்வாறு அறிவுத்தேடலையும் கல்வியையும் எல்லாப்பிரிவு மக்களுக்கும் எளிதில் வாய்க்கச்செய்து, வாசிப்பறிவில் சமத்துவம் என்னும் நிலையைக் கொண்டுவந்து, அதன் வாயிலாகச் சமூகநீதியை நிலைநாட்டுகிறது என்பதை ஆய்கிறது.

❍ **பெரியாரின் அறிவியல் தொலைநோக்கு**
**பேரா. மு. கசுத்தூரிபாய்**

தந்தை பெரியாரின் அறிவியல் குறித்தான பார்வைகளை, அவரின் 'இனிவரும் உலகம்' என்னும் நூலில் இருந்து இக்கட்டுரை எடுத்தாய்கிறது. கர்ப்பத்தடை, சோதனைக்குழாய்க் குழந்தை, அலைபேசி, துப்புரவு எந்திரங்கள், வானியல் ஆராய்ச்சிகள் குறித்துப் பெரியார் பேசியவை இன்று நடைமுறைக்கு வந்துவிட்ட நிலையில், அறிவியல் வளர்ச்சிக்கு எதிரான மதக்கோட்பாடுகள் தகர்ந்துள்ளதை இக்கட்டுரை பேசுகிறது.

PERIYAR MANIAMMAI
INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY
(Deemed to be University)
think • innovate • transform
Periyar Nagar, Vallam, Thanjavur - 613 403. Tamil Nadu, India.

dravidapozhil.pmu.edu